March -2019 | Volume-5 | issue-54

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மார்ச் - 2019 பருவம் - 5 புனல் - 54

தனிச்சுற்று நன்கொடை ரூ 25

for private circulation only




## இந்தியாவில் இனி தேர்தல் நடக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதற்காகவே 2019 தேர்தல்!




## இந்தியாவில் இனி தேர்தல் நடக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதற்காகவே 2019 தேர்தல்!

தி.மு.க. வை எதிர்த்துப் போராடுவதற்கும் கூட,



# தி.மு.க. வெல்லவேண்டும்!

2019 நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப் பட்டு விட்டது. தேர்தலுக்கு முந்தைய கூட்டணிகளும், அந்தக் கூட்டணிக் கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளும், வேட்பாளர் பட்டியல்களும் வெளியிடப்பட்டு விட்டன. தி.மு.க தலைமையிலான கூட்டணியின் தேர்தல் வாக்குறுதிகளும், அதி.மு.க தலைமையிலான கூட்டணியின் வாக்குறுதிகளும் பரபரப்பாக விவாதிக்கப்படுகின்றன.

காட்டாறு ஏட்டைப் பொறுத்தவரை, இந்தக் கூட்டணிகள் அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள், தேர்தலில் நிற்பவர்களின் ஜாதி, மதம், பாலினம், வர்க்கப் பின்னணிகள் என அனைத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு - எந்த வரையறைகளையும், எந்த நிபந்தனைகளையும், எந்த வேண்டுகோள் களையும் ஒரு சடங்காகக்கூட முன்வைக்காமல், ஒற்றைச் செயல்பாடாக தி.மு.க. வையும், அதன் கூட்டணிக் கட்சிகளும் வெற்றிபெற உழைப்பது என முடிவு செய்துள்ளது.

தி.மு.க வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்றால், நீட் தேர்வு ஒழியும், கல்வி மாநிலப் பட்டியலுக்கு வரும், மாநிலங்களின் அதிகாரங்கள் மீட்கப்படும், விவசாயிகள் - நெசவாளர் - மாணவர் களின் கடன்கள் ரத்து செய்யப்படும் என்பவை போன்ற பலவற்றைக் குறித்துக் கனவு காணவில்லை. இவற்றை எல்லாம் தி.மு.க. செய்து முடிக்கும் என்றாலும் கூட வாக்காளர்களுக்கு அப்படிப்பட்ட குறைந்தபட்ச நம்பிக்கையைக் கூட விதைக்க விரும்ப வில்லை. ஏனெனில், இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை வைத்து நடக்கப் போகும் தேர்தல் அல்ல.

தேர்தல் அறிவிப்புகள், தேர்தல் ஆணைய நடைமுறைகள், கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், பேரங்கள், தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் நேர்காணல், வேட்பாளர் அறிவிப்பு, தேர்தல் வாக்குறுதி வெளியீடு, வேட்புமனுத்தாக்கல், தேர்தல் பரப்புரை, தேர்தல், தேர்தல் முடிவுகள் அறிவிப்பு.....இவை போன்ற செயல்பாடுகளை இனிமேல் நாம் பார்க்க முடியுமா? முடியாதா? அடுத்தடுத்த தலைமுறைகள் இவற்றைப் பார்க்க வாய்ப்பு இருக்கிறதா? இல்லையா? என்பதை உறுதிசெய்யப்போகும் தேர்தல்தான் இந்த 2019 நாடாளுமன்றத் தேர்தல்.

### Bhartiya Shiksha Board

ஆர்.எஸ்.எஸ். மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால், கல்வித்துறையில் மாநிலப் பட்டியல், மத்தியப் பட்டியல் என்றெல்லாம் இரு பிரிவுகள் இருக்கப் போவதில்லை. ஒரே பட்டியல்தான். அது மத்திய, பார்ப்பனப் பட்டியல் மட்டும்தான். இந்தியாவில் ஏராளமான கல்வி முறைகள், பாடத்திட்ட முறைகள் நடைமுறையில் உள்ளன. அவை அனைத்தும் ஒழிக்கப்பட்டு BSB ( Bhartiya Shiksha Board ) என்ற பாடத்திட்ட, பயிற்சி முறை மட்டுமே செயல்படப் போகிறது.

இந்தப் பார்ப்பன குருகுலக் கல்வி முறையை இயக்குவதற் கென்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் பார்ப்பன சாமியார்களின் தலைமையிலான ஒரு துறை உருவாக்கப்பட்டுவிட்டது. (MSRVP) Maharshi Sandipani Rashtriya Vedavidya Pratishthan என்ற அமைப்புதான் இனி இந்தியாவின்.... மன்னிக்கவும் பாரதநாட்டின் கல்வியை ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் இருந்து நிர்வகிக்கப்போகிறது. கடந்த 11.01.2019 மற்றும் 12.02.2019 ஆகிய தேதிகளில் அதற்கான மத்திய அரசு அங்கீகாரங்களும் வழங்கப்பட்டு விட்டன.

### மத்திய அரசு நிர்வாகம்

நிர்வாகத்துறையில், கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்தே, அதாவது, பா.ஜ.க வின் மோடி ஆட்சி தொடங்கிய நாளிலிருந்தே அனைத்து இந்திய நிர்வாகப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். காரரர்களை நியமனம் செய்யும் நடைமுறையும் தொடங்கி விட்டது. மோடியின் இந்த மறைமுகத்திட்டம் 2016 ஆம் ஆண்டில்தான் ஊடகங்களில் வெளியானது.

அகில இந்திய நிர்வாகப் பணிகளுக்காக, ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.ஆர்.எஸ், ஐ.எஃப்.எஸ் போன்ற பயிற்சிகளும் தேர்வு முறைகளும் உள்ளன. அதற்கென தனி தேர்வாணையமும் இயங்குகிறது. மத்திய அரசின் அனைத்து முக்கியத் துறைகளையும் இந்தத் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்படும் அதிகாரிகள்தான் நடத்துகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ் அதிகாரத்திற்கு வந்த 2014 ஆம் ஆண்டில், மத்திய அரசின் துறைகளில் இணைச் செயலாளர் என்ற நிலையில் 260 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 100 பேர் ஐ.ஏ.எஸ் தேர்வு முடிக்காதவர்கள். அந்தப் பயிற்சிக்கே போகாதவர்கள் ஆவர். ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர், வெறும் பட்டப்படிப்பு முடித்திருந்தால் போதும். ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு இணையான நிர்வாகி யாகப் பதவி பெற்றுவிடலாம் என்ற நிலை உருவாக்கப் பட்டுவிட்டது.

அதுவும் சாதாரண துறைகளுக்கு அல்ல; பாதுகாப்புத் துறை, உள்துறை, நிதித்துறை, கல்வித்துறை பெட்ரோலியத்துறை, கனிம வளத்துறை, சாலை போக்குவரத்துத்துறை என நாட்டை இயக்கு கின்ற, முக்கியமான அனைத்துத் துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டு துக்ளக் இதழின் ஆசிரியர் குருமூர்த்தி, இந்தியாவின் நிதித்துறையின் மிக முக்கியத் தூண் ஆன, ரிசர்வு வங்கியின் 10 இயக்குநர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அவரைப் போலவே இனும் ஒரு ஆர்.எஸ்.எஸ். காரரான 'சதீஷ் மாரத்தே' என்பவரும் ரிசர்வ் வங்கியின் இயக்குநர் குழுவில் நியமனம் பெற்றார். இவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். ஆதரவுத் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

மீண்டும் ஆர்.எஸ்.எஸ். அதிகாரத்திற்கு வருமானால், "ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்" போன்ற என்ற பதவிகளே முற்றிலும் ஒழிக்கப்பட்டாலும் வியப்பிப்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களாக எச்.இராஜாக்களும், மாவட்டக் காவல் கண்காணிப் பாளர்களாக அர்ஜுன் சம்பத்களும் நியமனம் பெறும் அவலம் நடந்தே தீரும்.

## நாடாளுமன்ற ஜனநாயகம்

**"நாம் கேட்கும் சுயராஜ்யம் என்பது, வெள்ளையர்களை நாட்டைவிட்டு வெளி யேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. எங்கள் நாட்டின் வேத, சாஸ்திரங்கள்தான் எங்களை ஆளவேண்டும். சுயராஜ்யம் வந்தால் மனுநீதியை அரசமைப்புச் சட்டமாகவே ஆக்கவேண்டும். ஆக்குவோம்"** என 1917 இல் பார்ப்பன ஆதிக்க வெறியோடு பேசினார் பாலகங்காதர திலகர்.

திலகரின் வழிவந்த ஆர்.எஸ்.எஸ்ஸின் மாணவர் பிரிவான ஏ.பி.வி.பி கடந்த கி.பி.2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் நாள் "இந்திய அரசியல் சட்டத்திற்கு" மாற்றாக , "பாரத் அரசியல் சட்டத்தை" எழுதி, அதை விவாதத்திற்கு வெளியிட்டது.

இப்போது நடைமுறையில் இருக்கும், "நாடாளுமன்ற", "தேர்தல்" முறைகளுக்கு மாற்றாக "குரு ஷபா" க்களையும், " ரக்ஷா ஷபா"க்களையும் பரிந்துரைத்துள்ளது. அந்த அமைப்பின் இணைய தளத்திலேயே அதை வெளியிட்டு உள்ளது. அனில் சாவ்லா என்பவர் அந்த மனு சட்டத்தைத் தயாரித்துள்ளார்.

கி.பி. 2000 லிருந்து அவர்களின் "குரு ஷபா" நோக்கிய செயல்திட்டம் மெல்ல மெல்ல மறை முகமாக முன்னேறி வருகிறது. இந்த 2019 தேர்தல், அந்த ஷபா க்களுக்கான இறுதிச் செயல்திட்டம். இதில் நாம் ஆர்.எஸ்.எஸ் கூட்டணியை வெற்றி பெறச் செய்தால், இனி நமது தலைமுறைகள் தேர்தல் என்ற ஒரு நடைமுறையைப் பார்ப்பதற்கு இன்னும் சில நூற்றாண்டுகள் ஆகலாம்.

ஆக, நாட்டின் எதிர்காலத்தைக் கட்டி எழுப்பக்கூடிய கல்வித்துறை, நாட்டை இயக்கும் மத்தியஅரசு நிர்வாகத்துறை, ஒரு அரசாங்கத்தை வழிநடத்தும் அரசியல் சட்டம், நாடாளு மன்றங்கள் போன்ற எல்லாவற்றையும் அழித்து - இந்தியாவைக் குப்தப் பேரரசுகளின் பார்ப்பனக் காட்டு மிராண்டிக் காலத்திற்குக் கொண்டு செல்லும் சீரழிவுத் திட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டன.

## நாம் என்ன செய்யப் போகிறோம்?

தற்போது உள்ள நாடாளுமன்ற ஜனநாயக முறை அடித்தட்டு மக்களுக்குச் சாதகமாக உள்ளது என உறுதி கூற முடியாது. ஆனால், இந்த முறையையிடச் சிறப்பான வேறு ஒரு ஆட்சிமுறை அடித்தட்டு மக்களுக்கு இன்னும் அறிமுகமே ஆகாத நிலையில், நடைமுறையில் இருக்கும் சிறு சிறு உரிமை களையும், வாய்ப்புகளையும் பறிக்கும் பார்ப்பனத்திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியது ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.

பா.ஜ.க.வும், காங்கிரசும் ஒன்று தான் என்று பொதுமைப் படுத்திப் பேசுவதற்கும் - மாநிலக் கட்சிகள் அனைத்தும் யோக்கிய மானவை; தேசியக் கட்சிகள் அனைத்தும் பித்தலாட்டமானவை என்று பொத்தாம் பொதுவாக அள்ளி விடுவதற்கும் - திராவிடக் கட்சிகள் தமிழ்நாட்டைச் சீரழித்து விட்டன என்று நேர்காணல் கொடுப்பதற்கும் - தேர்தல் அரசியலைப் புறக்கணிப்போம், இயக்க அரசியலை முன்னெடுப்போம்! என்று நரம்பு புடைக்கப் பேசுவதற்கும் - **தி.மு.க. வை எதிர்த்துப் போராடுவதற்கும் கூட - இந்தத் தேர்தலில் தி.மு.க வெல்லவேண்டும்.**

***2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்ற இடைத் தேர்தல்களிலும் தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வெல்ல வேண்டியது தி.மு.க.வுக்கோ, அதன் கூட்டணிக் கட்சி களுக்கோ அவசியமல்ல; திராவிடர் இன விடுதலைக்குத்தான் இந்த வெற்றி மிகவும் அவசியமானது.***

**சான்றுகள்: *Economic Times 18.02.2016, Hindustan Times 11.08.2018, India Today 12.06.2018, The Wire.in 13.01.2019, Scroll.in 14.02.2019***



தோழர் வாசுகி

# ஆண் குழந்தைகளை மனிதர்களாக வளர்ப்பதே உடனடித் தேவை

பொள்ளாச்சி என்றவுடன் மக்களுக்கு பாலியல் வக்கிரங்களே நினைவுக்கு வருமளவுக்கு மிகப் பெரிய கொடூரம் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாட்டில்கூட இப்படிப்பட்ட வக்கிரங்கள் நடக்குமா? என்று இன்னும் நம்ப முடியவில்லை. ஆனால், தொடர்ந்து வரும் செய்திகளைப் பார்க்கும் போது இப்படிப்பட்ட மனித மிருகங்களும் இருக்கிறார்கள் என்பதை நம்பித்தான் ஆக வேண்டியிருக்கிறது. ஆனால், மிருகங்களுடன் கூட இவர்களை ஒப்பிடக்கூடாது. ஏனென்றால் மிருகங்கள்கூட பாலியல் தேவைக்காக ஆணும், பெண்ணும் கூடுகின்றனவே தவிர, பெண் மிருகத்தை வதைக்க வேண்டும் என்று எந்த ஆண் மிருகமும் நினைப்பதில்லை.

சமீப காலத்தில்தான் காதல் திருமணங்கள் பரவலாக நடைபெறுகின்றன. அதற்கே ஏகப்பட்ட எதிர்ப்புகளும், அச்சுறுத்தும் விதமாக ஆணவக் கொலைகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. வயது வந்த ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி, காதல் திருமணம் செய்து கொள்வதையே கலாச்சாரம் கெட்டுவிட்டது என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருந்த பெற்றோர்கள், இந்த வக்கிரங்களுக்கு என்ன சொல்லப்போகிறார்கள்?

இப்படிப்பட்ட கொடூரங்களை அரங்கேற்றியவர்களும் ஒரு குடும்பத்தில் தாய்க்கு மகனாகவும், சகோதரிக்கு அண்ணனாகவோ, தம்பியாகவோ இருப்பவர்கள்தானே? அப்படியானால் குடும்பத்திலிருந்துதான் இந்த வன்முறைகள் தொடங்குகின்றன

ஆண் குழந்தைகளை வளர்க்கும் முறைதான் இத்தனை அவலங்களுக்கும் காரணமாகிறது. அவன் ஆண்பிள்ளை, அப்படித்தான் இருப்பான் என்று அவன் முன்னேயே சொல்லிச் சொல்லி அவனை ஒரு ‘தாதா’வாக ஆக்கிவிடுகிறார்கள்

அதேபோல் பெண் குழந்தைகளை, குழந்தைப் பருவம் முதலே அவர்களை அழகுபடுத்திக் கொள்ளப் பழக்கிவிடுகிறோம், பெண் குழந்தைகளைக் குழந்தையாக வளர்க்காமல் அவர்களைப் “பொம்பளை” யாகவே வளர்க்கிறார்கள். இவ்வாறு வளரும் பெண்கள் வளர் இளம் பருவத்தில், ஆண்களைக் கவர்வதே தங்களுடைய தலையாயக் கடமையாகவும், அதற்காகத் தங்களை அழகுப்படுத்திக் கொள்வது மாக இருக்கிறார்கள்

குழந்தைகளை இவ்வாறு வளர்த்துவிட்டு, அவர்களுக்கிடையில் மாயத்திரையைப் போட்டு விடுகிறார்கள். எப்படியென்றால், மூன்று வயதில் முதன் முதலில் பள்ளிக்குச் செல்லும்போதே, பள்ளியிலுள்ள மொத்தப் படித்த ஆசிரியர்கள் முதற்கொண்டு ஆண் குழந்தைகளைத் தனியாகவும், பெண் குழந்தைகளைத் தனியாகவும் அமர வைக்கிறார்கள். அப்போதே ஆரம்பித்து விடுகிறது பாலியல் பிரச்சனை.

எனவே, எல்.கே.ஜி.முதல் பிளஸ்-2 வரை மாணவ, மாணவியரை வகுப்பறையில் பெயரின் அகர வரிசைப்படியோ அல்லது உயர வரிசைப்படியோ கலந்து அமரச் செய்தால் அவர்களுக்குள், ஆணைப் பார்த்து பெண்ணுக்கோ, பெண்ணைப் பார்த்து ஆணுக்கோ ஒதுக்கம் ஏற்படாமல் அவர்களுக்குள் நல்ல நட்பு மலர வாய்ப்பு ஏற்படும்.

அதுமட்டுமல்ல, உடல்ரீதியாக அவர்களுக்குள் ஏற்படும் மாற்றங்களையும், மன அழுத்தங்களையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய உற்ற தோழர்களாகவும் மாறலாம். அந்த நட்பு காதலாக மாறினால் கூட அவர்கள் தங்கள் வாழ்க்கையை முறையாகத் திட்டமிடக்கூடிய காதலர்களாகவும், சிறந்த பெற்றோராகவும் இருப்பார்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

ஒரு தலைமையாசிரியர் கூறுவார், "ஏன்தான் இப்படி ஆண்கள் பள்ளி என்றும் பெண்கள் பள்ளி என்றும் பிரித்து வைக்கிறார்களோ? பள்ளியில் மணியடித்தவுடன், பெண்கள் பள்ளியின் வாசலில்தான் போய் பையன்கள் நிற்கிறார்கள்" என்று. அது உண்மைதான்.

மேலே சொன்னபடி இருபாலர் பள்ளிகளாகவே எல்லாப் பள்ளிகளையும் ஏற்படுத்தி, அதில் மாணவ, மாணவியரைக் கலந்து அமர வைத்துக் கற்பித்தால், மாணவர்கள் மாணவியரை வேடிக்கை பார்ப்பதையும், அதற்காக மாணவிகள் எந்நேரமும் அலங்காரம் செய்வதிலேயே கவனம் செலுத்துபவர்களாகவும் இருப்பதை மாற்றி அவர்களைச் சிறந்த மாணாக்கர்களாக மாற்ற முடியும்.

அது மட்டுமல்ல. மேல்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவ, மாணவியரிடம் குழு விவாதங்களை (Group Discussion) நடத்தலாம். நாட்டில் அன்றாடம் நடக்கும் ஏதேனும் நிகழ்வுகளைப் பற்றியோ, குடும்ப உறவுகள் பற்றியோ, வகுப்பில் ஒரு அரைமணிநேரம் விவாதம் நடத்தி அவரவர் கருத்துக்களைக் கூற வைக்கலாம். அவ்வாறு பேச வைத்தால், உலக நடப்புகளைப்பற்றித் தெரியாமல் இருக்கும் சில மாணவ, மாணவியருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும்.

எந்நேரமும் பாடங்களை மட்டுமே மூளையில் திணிக்க முயலாமல், வாழ்க்கைக் கல்விக்காக அரைமணி நேரம் ஒதுக்கினால் அவர்களுக்கு மனதளவில் ஒரு அமைதி ஏற்படும். அடுத்த வகுப்பில் அவர்கள் மலர்ச்சியுடன் பாடங்களைக் கவனிக்க ஏதுவாக இருக்கும். ஆம், நம் இளைய தலைமுறையினரை மனநோயாளிகளாகத்தான் ஆக்கிக் கொண்டிருக்கிறோம்.

சாதாரணமாக ஆண், பெண் நட்பு பாராட்டுவதையும், பழகுவதையுமே உலக மகா குற்றம் என்று வீட்டில் பெற்றோர் கூறிக் கொண்டிருக்கும் அதே வேளையில் இணையத்தில் பாலியல் வக்கிரங்கள் கொட்டிக் கிடந்தால் அந்த இளைஞர்கள் மனநிலை எப்படி இருக்கும்? எல்லோரும் அப்படி வக்கிரம் பிடித்தவர்களாக இருக்கமாட்டார்கள்தான்.

ஆனால், எக்கச்சக்கமான பண வசதியும், பெரிய அதிகாரப் பதவியும் உள்ளவர்கள் வீட்டில் வளரும் ஆண்பிள்ளைகள், என்ன வேண்டுமானாலும் செய்யலாம். தன்னைக் காப்பாற்றி விடுவார்கள் என்ற நினைப்பில், தான் செய்யும் காரியம் சக மனுஷியை எப்படி உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் காயப்படுத்தும் என்கிற வருத்தம் துளிகூட இல்லாமல், தான் மகிழ்ச்சியாக இருப்பதும், தன்னுடைய நண்பர்களை மகிழ்ச்சிப் படுத்துவது மட்டுமே தன் வாழ்க்கை இலட்சியமாக நினைத்துக் கொள்கிறார்கள்.

பொள்ளாச்சி நிகழ்வுகளைப் பொறுத்தவரை எல்லோரும் அந்தப் பெண்கள் ஏன் அவர்களுடன் போகவேண்டும்? அவள்களுக்கு எவ்வளவு தைரியம்? அவள்களால் குடும்ப மானமே போய்விட்டது என்று பாதிக்கப்பட்ட அந்தப் பெண்கள் எல்லோரும் 'கற்பு' என்னும் சுமையை அவர்கள் தலையிலிருந்து இறக்கி வைத்துவிட்டு அந்தக் கயவர்களுடன் சென்றதுதான் தப்பு என்று பாதிக்கப்பட்ட பெண்கள் மீதே குற்றம் சுமத்துகிறார்கள்.

உண்மையில் ஒரு பெண் தான் இதுநாள்வரை நட்புடன் பழகிக் கொண்டிருந்த, காதலனுடன் அவன் அழைக்கும் இடத்துக்குச் செல்கிறாள். அங்கு அவர்கள் தங்கள் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள் என்றாலும்கூட, அதுவரையில் எந்தத் தவறும் கிடையாது. வயது வந்த ஆணும், பெண்ணும் தங்கள் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வது, இயற்கையான விஷயம். இதில் மூன்றாம் நபர்கள் என எவரும் தலையிட வேண்டியதில்லை. இதனால் அவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை, பெற்றோர் உட்பட.

ஆனால், அதை வீடியோவாக ஒருவன் எடுக்கிறான் என்றால், அதிலேயே அவனுடைய கொடூரம் ஆரம்பித்து விடுகிறது. அதோடு விட்டாலும் பரவாயில்லை. இந்த வீடியோவைக் காட்டி அவளை மிரட்ட ஆரம்பிக்கும் போதுதான், அந்தப் பெண் தன் தவறை உணர்கிறாள். இருவரும் சேர்ந்து செய்த செயல்தான். இது தவறு என்று கருதினாலும், அது இரு நபர்களும் இணைந்து நடத்தியதுதான்.

ஆனால், அந்த இருவரில் ஒருவன் எக்காளத்துடன் மிரட்டுவதும், மற்றொருத்தி தான் மிகப்பெரிய தப்பைச் செய்துவிட்டோம் என்று கதறுவதற்கும் காரணம் என்ன? தான் செய்வது தவறு என்ற குற்ற உணர்ச்சி சிறிதுகூட இல்லாமல் ஆண் இருப்பதற்கும், உலக மகாகுற்றம் செய்துவிட்டதாகப் பெண் நினைப்பதற்கும் இந்த சமுதாய அமைப்பே காரணம்.

தன் வீட்டில் இருப்பவர்கள் மட்டுமல்ல, தன்னைச் சுற்றி இருக்கும் அனைவரும் தன்னை மிகக் கேவலமாகப் பேசுவார்கள், தன்னால் வெளியில் தலைகாட்ட முடியாது என்ற நினைப்புத்தான் பெண்களை, தங்களுக்கு நேர்ந்த அவலத்தை வெளியில் சொல்லவிடாமல் தடுக்கிறது.

ஆனால், வீடியோ எடுத்தவன் அந்த ஒரு நிகழ்வோடு நிறுத்தாமல், ஒரு பெண் பயந்து, தான் சொல்வதையெல்லாம் கேட்பதைப் பார்த்துவிட்டு, சும்மா இருப்பானா? அவனுக்கு இது கொண்டாட்டமாக இருக்கிறது.

பணக்கார இளைஞர்களுக்கென்றே அவர்கள் சொல்வதைக் கேட்கின்ற, அவர்கள் செய்வதெல்லாம் சரிதான் என்று கொம்புசீவி விடுகின்ற நண்பர்கள் என்ற பெயரில் எடுபிடிகள் இருப்பார்கள். அவர்களிடம் தான் செய்த காரியத்தைப் பெருமையாகக் கூறுவதுடன் நிற்காமல், பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வீடியோவைக் காட்டி மிரட்டி இதை வெளியிடாமல் இருக்கவேண்டும் என்றால் நான் சொல்பவர்களுடன் எல்லாம் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று மிரட்டியிருக்கிறான் என்றால் இவனை மனிதப் பிறவியாகக் கருத முடியாது.

அது மட்டுமல்ல, முதலில் வீடியோ எடுத்ததே இவனுடைய நண்பர்கள்தான். நண்பர்களையும் அழைத்து கொண்டு வந்து திட்டமிட்டே இந்தக் காரியத்தை அவன் செய்கிறான். அதுமட்டுமல்ல, ஒருமுறை எளிதாக இந்தக் காரியம் முடிந்துவிட்டதால், அவர்களுடைய வேட்டை தொடர்கிறது. தொடர்ந்து பெண்களை ஏமாற்றி ஆசைகாட்டி அழைத்து வந்து தங்களுடைய இச்சைக்கு உட்படுத்தி அதை வீடியோவாக எடுத்துப் பெண்களை மிரட்டுகிறார்கள்.

அதிலும் பணக்காரப் பெண்களாக இருந்தால் பணம் கேட்டு மிரட்டுவதும், பணம் கொடுக்க முடியாத பெண்களாக இருந்தால், அவர்கள் கை காட்டும் நபர்களின் பாலியல் இச்சையைத் தீர்க்க அவர்களைக் கட்டாயப்படுத்துவதுமாக இவர்களுடைய கொடூரங்கள் தொடர்ந்திருக்கின்றன. ஒரு கட்டத்தில் தங்களுடைய இச்சைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துக்கொள்ளாத பெண்களை பெல்ட்டால் அடித்தும் தங்கள் இச்சையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இவர்களுடன் தான் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பே அருவருப்பாக இருக்கிறது.

எனவே, இப்படிப்பட்ட வக்கிரம் பிடித்த ஆண்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதாலும், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதாலும் மட்டுமே இங்கு எதுவும் மாறிவிடப் போவதில்லை. இனி பெண்கள்தான் மாறவேண்டும். தாங்கள் பாதிக்கப்பட்ட விஷயத்தை வீட்டில் சொல்லத் தைரியம் வராமல் - தங்களைப் பாதிப்புக்குள்ளாக்கிய கயவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் சென்று, இறுதியில் தாங்க முடியாத நிலையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். எத்தனை பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டார்களோ?

தற்போது பொள்ளாச்சியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக 28 பேர் கொண்ட நிபுணர்கள் குழு களமிறங்கியுள்ளது ஓர் ஆறுதலான விஷயம். பாதிக்கப்பட்ட பெண்களிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்றும், சி.பி.ஐ. விசாரணையின்போது இவை பாதிக்கப்பட்டவர்களின் தரப்பில் இக்குழுவினரால் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். அது மட்டுமில்லாது தமிழகத்தில் எந்தப் பகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடைபெற்றாலும் அவர்களும் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

எனவே, இனி வருங்காலங்களிலாவது பெற்றோர் தங்களது வளரிளம் பருவத்துக் குாந்தைகளிடம் ஆண் குழந்தையானாலும், பெண் குாந்தையானாலும் அந்த வயதில் ஏற்படும் பாலியல் ஈர்ப்பு பற்றிப் பேசவேண்டும். அதுமட்டுமல்ல, ஆண் குாந்தையானாலும், பெண் குழந்தையானாலும், இருவரும் ஒருவரையொருவர் சக மனிதர்களாக நடத்தவேண்டும் என்றும், ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும் என்றும் தோழமை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.



இளம் பெண்கள் இனியாவது, தாங்கள் தவறான நண்பனைத் தேர்ந்தெடுத்ததால், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டாலோ, அல்லது அதனை வீடியோவா எடுத்து அதை வெளியிட்டு விடுவேன் என்று அவன் மிரட்டினாலோ அதனைத் தைரியமாக எதிர்கொள்ளவேண்டும். தங்களது தலையில் சுமத்தப்பட்டிருக்கும் கற்பு, குடும்பமானம் போன்ற சுமைகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, தன்னைப் பாதிப்புக்குள்ளாகியவனிடம் உன்னை நண்பனாகத் தேர்ந்தெடுத்ததைத் தவிர நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. தண்டிக்கப்பட வேண்டியவர் நீதான் என் உடலை வைத்து வியாபாரம் செய்யலாம் என்று நினைக்காதே, எல்லாப் பெண்களுக்கும் உள்ள மாதிரிதான் என் உடலும் உள்ளது, உன்னால் என்ன செய்யமுடியுமோ செய்துகொள் என்று தைரியமாகப் பேசுங்கள் அல்லது தற்போது அமைக்கப்பட்டுள்ள 28 பேர் கொண்ட நிபுணர்கள் குழுவிடம் நேரிலோ அல்லது அவர்கள் குறிப்பிடுள்ள அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு உங்களது பிரச்சனைகளைக் கூறுங்கள். அக்குழுவில் உளவியல் நிபுணர், வழக்கறிஞர் எல்லோரும் இருப்பதால் உங்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கும்.

இந்த 21-ஆம் நூற்றாண்டிலாவது பெண்கள் உங்களது வாழ்க்கையை உங்களுக்காக, உங்களது மகிழ்ச்சிக்காக வாழுங்கள்! வாழ்த்துகள்!

பொள்ளாச்சி விஜயராகவன்

**10-03-1920 - 10-03-2019**

# நூற்றாண்டு

## தொடக்கத்தின் நினைவாக





திராவிடர்களின் தலைவர்

# அன்னை மணியம்மையார்

உலகில் தோன்றிய எத்தனையோ புரட்சிகரமான இயக்கங்கள் மற்றும் அதனைத் தோற்று வித்த தலைவர்கள் அந்தந்த மண்ணில் சிறப்பான வர்களே வெற்றியாளர்களே! இதனைச் சரித்திர சான்றுகள் இன்றுவரை பதிந்து ஆவணப்படுத்தி யுள்ளது.ஆனால்!

வேறு எந்த நாட்டிலும் இல்லாத மக்கள் தொகையில் வெறும் மூன்று சதவீதத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்து-இந்தி - இந்தியா என்கிற இந்த நாட்டில் பிறப்பின் அடிப்படையில் உழைக்கும் வெகு மக்களை நால் வர்ணம், நாலாயிரம் சாதிகளாகப் பிரித்து அந்தப் பிரிவில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இன்றுவரையிலும் ஆதிக்கச் சக்திகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை எதிர்க்கத் துணிந்த எல்லோரையும், எவற்றையும், எதையும் இந்து மதம் சொன்ன சாம - பேத - தான - தண்டம் முதலியவற்றைப் பயன்படுத்தி அழித்தார்கள். தங்களை யாரும் வெல்ல முடியாத கட்டுக்கோப்பான அமைப்புகளை உருவாக்கி அரசியல், சமூக, பொருளாதார துறையில் பல ஆயிரம் ஆண்டுகள் அதிக்கம் செலுத்தி வந்தார்கள்.

இந்த சூழலில் தென்னகமாம் திராவிடர் நாட்டில் 1925-ஆம் ஆண்டு கலகக்காரர் தோழர் பெரியார் திராவிடர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். அந்த இயக்கத்தில் தானே அதன் கொள்கை வகுப்பாள னாகவும் அதனைச் செயல்படுத்தும் பரப்புரை மற்றும் போராட்டங்களை முன்னின்று நடத்தும் தளபதி யாகவும் விளங்கி பல்லாயிரக்கணக்கான திராவிடர் இயக்கத் தொண்டர்களையும் உருவாக்கி தன்னைப் பின்பற்றச் செய்து திராவிடர் இன-மான மீட்புப் பணியில் எண்ணற்ற தன்னல மறுப்பு வீரர்களின் துணை கொண்டு நடத்தி இருந்தாலும்,

அவர்களில் குறிப்பிடத்தக்க வகையில் பழமை வாதம் படிந்த மக்கள் மத்தியில் அவருக்குத் துணையாக நின்ற கலகக்காரர் தோழர் பெரியாரின் ஆயுள் நீடிப்பின் ரகசியமாக விளங்கிய அன்னை ஈவெரா மணியம்மையார் குறித்து திராவிடர் இயக்க இளைய இருபால் தோழர்கள் அறிந்து கொள்ளவும், “அனைத்து உலக மகளிர் நாளில்” அன்னை மணியம்மையாரின் உரை மற்றும் அறிக்கைகள் அரிய செய்திகள் அடங்கிய இத்தொகுப்பை “காட்டாறு” குழு பகிர்ந்து கொள்கிறது.

"உலக வரலாற்றில் மகளிரில் எவரும் எதையும் தியாகம் செய்வது எளிது - இளமையையே தியாகம் செய்வது எளிதல்ல! ஆனால், தாம் கொண்ட இலட்சியப் பிடிப்புக்காக, அவற்றைத் தந்த தலைவருக்காகவும், அவர்கண்ட இயக்கத் திற்காகவும், தம்மையே தந்த, வெந்த, புடம் போட்ட தங்கம் அவர்!"

"அசிங்கங்களும், அருவருப்புகளும் குவியல் குவியலாக வசை மொழிகளாக அவர் மீது வீசப்பட்டும்,"

'குடி செய்வார்க்கில்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்' என்ற பெரியாருக்குப் பிடித்த குறளின் இலக்கியமாய் வாழ்ந்தவர்கள் அம்மா!

இதுவரை 'பற்றற்று, பற்றற்றான் பற்றினைப் பற்றி' வாழ்ந்து அவர் சொத்துக்கள் அனைத்தையும் மக்களுக்கு விட்டுச் சென்ற "மக்களைப் பெற்ற மகராசி"யாகவே, மக்களின் உள்ளத்தில் குடியேறியவர்!

தூற்றியவர்கள் போற்றினார்கள்! ஒதுங்கிய வர்கள் ஓடோடி வந்து உயர்த்தினார்கள்!

என்றாலும் அவர் ஒரு சலனமுற்று சீராக ஓடும் ஜீவநதியாகவே இன்று ஓடிக் கொண்டிருக் கிறார்கள் - பொதுவாழ்வு வரலாற்றில்!"

மேலே கண்டுள்ள அன்னை மணியம்மையார் குறித்த பதிவானது திராவிடர் கழகத் தலைவர் தோழர் கி.வீரமணி அவர்களின் அணிந்துரை யிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. இதிலிருந்து அன்னையாரின் பணி நீள, அகல பரிணாமங்களைப் புரிந்துகொள்ளலாம்.

**வாழ்க்கைக் குறிப்புகள்**

1920 மார்ச் மாதம் 10 ஆம் நாள் வேலூரில் வி.எஸ். கனசபை பத்மாவதி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். உடன் பிறந்தவர்கள் சண்முகம், தியாகராஜன் ஆகிய இரு சகோதரர்களும், கமலா என்ற சகோதரியும் ஆவார்கள்.

வேலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி இறுதியாண்டு ( எஸ்.எஸ்.எல்.சி ) வரைப் படித்தார்.தமிழ்ப் புலவர் வகுப்பு படிக்கையில் கல்வி தடைப்பட்டது.

1943 செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் - தந்தை பெரியாரின் சுயமரியாதை கருத்துக்களால் கவரப்பட்டு அய்யாவின் தொண்டராகப் பணியாற்ற வந்தார்.

1948 டிசம்பர் 20 ஆம் நாள் குடந்தையில் நடந்த மொழி உரிமைப் போரில், அரசு தடையை மீறியதாக கைது செய்யப்பட்டு பாபாநாசம் சப் -ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

விசாரணைக்குப் பின் இரண்டுமாதம் தண்டனை அளிக்கப்பட்டு வேலூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்.

1949 பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் வேலூர் சிறையிலிருந்து விடுதலை அடைந்த மணியம்மை யாரை தந்தை பெரியார் வரவேற்றார்.

மார்ச் மாதம் 31 ஆம் நாள் சென்னையில் அன்னை மணியம்மையார் தலைமையில் இந்தி எதிர்ப்பு போர் நடந்தது.

ஜீலை மாதம் 9 ஆம் நாள் பெரியார் ஈவேரா மணியம்மையார் அவர்கள் பதிவுத் திருமணம் முறைப்படி ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

திருமணத்திற்குப் பிறகு கே.ஏ. மணியம்மை என்று இருந்துவந்த பெயரை ஈ.வெ.ரா.மணியம்மை என்று தமிழிலும் E.V.R.மணியம்மையார் என்று ஆங்கிலத்திலும் அழைக்குமாறு தந்தை பெரியார் வேண்டுகோள் விடுத்தார்.

1958 மார்ச் மாதம் 8 ஆம் நாள் சாதி ஒழிப்பு போரில் ஈடுபட்டு திருச்சி சிறையில் அடைக்கப் பட்ட தோழர் பட்டுகோட்டை ராமசாமியும்,10 ஆம் நாள் மணல்மேடு வெள்ளைச்சாமியும் மாண்டனர். இவர்களின் சடலத்தைதர சிறை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். ஆந்த நேரத்தில் மணியம்மையார் அவர்கள் முதலமைச்சர் காமாராசர் அவர்களை சந்தித்து மறைந்த தோழர்களின் உடல்களை திரும்பப் பெற்றார். மணியம்மை தலைமையில் சவ ஊர்வலம் சிறப்பாக நடைந்தது.

1958 ஜனவரி 19 ஆம் தேதி விடுதலையில் வெளியான "இளந்தமிழா புறப்படு போருக்கு" என்ற கட்டுரை சம்பந்தமாக அதன் ஆசிரியரும் வெளியிடுபவருமான திருமதி மணியம்மையார் மீது வழக்குத் தொடரப்பட்டது. மணியம்மையாருக்கும் கட்டுரையை எழுதிய தோழருக்கும் ஒரு மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

1973 டிசம்பர் 24 ஆம் நாள் 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் அவர்கள் மறைந்தார். அதன்பின் அன்னை மணியம்மையார் அவர்கள் கழகத்தலைவர் பொறுப்பேற்று திராவிடர் கழகத்தை வழி நடத்திச் சென்றார்.

1974 டிசம்பர் 25 ஆம் நாள் சென்னை பெரியார் திடலில் நடந்த "இராவண லீலா" நிகழ்ச்சி சம்பந்தமாக அன்னை மணியம்மையார் கைது செய்யப்பட்டார். இது சம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டது.

1976 செப்டம்பர் 9 ஆம் நாள் 'இராவண லீலா' வழக்கில் அன்னை மணியம்மையார் மற்றும் தோழர்களுக்கு 6 மாதம் சிறை தண்டனை வழங்கப்பட்டது. வழக்கை எதிர்த்து அப்பீல் செய்து அனைவரும் விடுதலை அடைந்தனர்.

16-09-1976 அன்று தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவிற்கு முதல் நாள் தீடிரென்று கைது செய்யப்பட்டு இரண்டு நாள் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.

1977 ஏப்ரல் 25 ஆம் நாள் "இராவண லீலா" வழக்கில் அம்மா மற்றும் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் தமிழகம் வந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு கருப்புக் கொடி காட்டியதற்காக மணியம்மையார் கைது செய்யப்பட்டார்.

*1978 மார்ச் மாதம் 16 ஆம் அன்னை மணியம்மையார் மாரடைப்பு நோயால் சென்னை பொது மருத்துவமனையில் காலமானார்கள்.*

*அன்னை மணியம்மையாரின் திராவிடர் இயக்கத்தில் ஆற்றிய எழுதிய முக்கியமான உரைகளும் கீழே பதிவிடப்படுகிறது.*

## பெண்கள் சமையல் வேலைக்குப் போகக்கூடாது!

**அன்னை மணியம்மையார்**

*தலைவர்களே, தாய்மார்களே, தோழர்களே!*

*இன்று மாதர் சங்கத்தை இக்கல்வி நிலையத்தின் சார்பாக திறந்து வைக்கும் பெருமை எனக்கு அளித்தற்கு நன்றி செலுத்துகிறேன். மாதர் சங்கமென்பது ஒவ்வொரு ஊரிலும் தனியாக ஒன்று இருக்கவேண்டியது அவசியமாகும். நம் நாட்டு மாதர்களுக்கு செய்ய வேண்டிய நலன்களுக்கு மாதர்கள் ஆண்களையே எதிர்பார்க்கிறார்கள். ஆண்கள் தங்கள் அடிமைகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியும்? தங்களுக்கு நல்ல அடிமையாய் இருப்பதற்கு ஏற்ற நன்மைதான் செய்ய முடியும்.*

*ஆதனால்தான் இந்த 20 ஆம் நூற்றாண்டிலும் மற்ற நாட்டு பெண்மணிகள் ஆகாயக் கப்பல் விடவும், பட்டாளத்தில் சேவிக்கவும், கல்வி மந்திரி யாகவும் இருக்கவும் ஆன நிலை ஏற்பட்டும் நம் நாட்டு நிலை ஆண்களுக்கு வாய் ருசிக்க சமைப்பதும் மெய் சிலிர்க்க கொஞ்சுவதுமான நிலை இருந்து வருகிறது. நம் நாட்டுப் பெண்மணிகளின் திறமை யெல்லாம் ஆண்கள் மெச்சும்படி, ஆசை கொள்ளும் படி அலங்கரித்துக் கொள்ளவும், தங்கள் ஆண் களுக்கு கடைமைப்பட்டு நன்றி செலுத்தும்படி விலை உயர்ந்த நகைகளும், புடவைகளும் அணிந்து கொள்ளவுமே ஆகிவிட்டது.*

*பெண்கள் படிப்பு விசயம்கூட நம்நாட்டு பெண்களுக்கு படிப்பு தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் படித்த பெண்கள் என்ன செய்கிறார்கள் ? பெரும்பாலும் சமையல்தான் செய்கிறார்கள். ஆகவே "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்பது நியாமான பேச்சேயாகும். சமையல் செய்யத் தகுந்தபடியே தங்கள் பெண்களைப் பயன்படுத்தும் பெண்களுக்கு பெற்றோர்கள் அதிகப்படிப்பளிப்பது நாட்டின் செல்வம், நேரம், ஊக்கம் பாழ் செய்யப்படுவதாகும்.*

*ஆதலால், பெற்றோர்களே தெரியாமல் கல்வி கொடுத்து விட்டாலும் கல்வி கற்ற பெண்கள் கண்டிப்பாய் சமையல் வேலைக்குப் போகக்கூடாது. சமையல் வேலைக்கும் குடும்ப நிர்வாகத்திற்கும் என்று மாத்திரம் பயன்படுத்த பெற்றோர்கள் கல்யாணம் செய்வார்களானால் கண்டிப்பாய் படித்த பெண்கள் கல்யாணத்தை மறுத்து விட வேண்டும். பெற்றோர்கள் கட்டாயப் படுத்தினால் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்.*



*நாம் படிப்பது அடிமையாகவா அல்லது மேன்மையும் விடுதலையும் பெறவா யோசியுங்கள். 10 பெண்களாவது ஓடினால்தான் பெற்றோர்கள் நன்றாக நடத்துவார்கள். ஆதலால், பெண்கள் சுதந்திரத்திற்காகப் படிக்க வேண்டும். படித்த பெண்கள் அடிமையாகக் கூடாது. இதற்கு மாதர் சங்கம் பயன்பட வேண்டும். என்று சொல்லி இச்சங்கத்தைத் திறந்து வைக்கிறேன்.*

*- குடி அரசு 19.08.1944*

## வடநாட்டு சுரண்டல் ஒழிப்பு போர்! பெண்களுக்கு அழைப்பு

*சென்னையில் நடைபெறுகிற வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியலிலே இவ்வட்டார மக்கள் பெரும் பங்கு கொண்டு, பெருவாரியாகச் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்கு நான் மகிழ்ச்சி யடைகிறேன். ஆனாலும் இத்தகைய போராட்டத்திற்கு நாட்டு விடுதலைக்கான நல்லதொரு கிளர்ச்சிக்கு ஆண்கள்தான் முன்வந்தார்களே தவிர, தாய்மார்கள் யாரும் இந்த வட்டாரத்திலிருந்து இன்னும் வரவில்லை.*

*இதிலே சேலம் மாவட்டம்தான் முதல் பரிசு பெற்றது. அங்கிருந்து தாய்மார்கள் குடும்பத்துடன் பேரூந்து மறியல் செய்து சிறையேகினார்கள். எனவே, இந்த வட்டாரத்து அருமைத் மாய் மார்களும் போராட்டக் கிளர்ச்சியிலே ஈடுபட்டுத் தியாகிகள் பட்டியலிலே தங்களது பெயரும் சேரும்படிச் செய்ய வேண்டும்.*

*- விடுதலை, 25.03.1951.*

பொள்ளாச்சி விஜயராகவன்



# அண்ணா - கலைஞர் - தி.மு.க: பெரியாரின் இறுதிக் காலக்கருத்துக்கள்

1949 ஆம் ஆண்டு தோழர் பெரியாரிடமிருந்து விலகித் தனிக்கட்சி தொடங்கினார் அண்ணா. அந் ஆண்டிலிருந்து 1967 இல் தி.மு.க ஆட்சி அமைக்கும் வரை பெரியார், தி.மு.க.வைக் கடுமையாக விமர்ச்சித்து வந்தார். ஆனால், அண்ணாவின் ஆட்சி அமைந்த பிறகு அண்ணாவின் பார்ப்பன எதிர்ப்பு நடவடிக்கைகளால் உற்சாகத்தின் எல்லைக்கே சென்றார் பெரியார்.

1967 லில் இருந்து பெரியார் மறைந்த 1973 வரை அண்ணாவின் ஆட்சி, கலைஞரின் ஆட்சி, தி.மு.க. என்ற அமைப்பு ஆகியவற்றுக்குக் காவல் அரணாகவே இயங்கினார் பெரியார். இந்தக் காலகட்டத்தில் பெரியார், தி.மு.க வைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் பேசிய உரைகளும், அறிக்கைகளும் அதிகமாகப் பரவவில்லை.

தனித்தமிழ்நாடு கேட்டுக் கொண்டிருந்த பெரியார், அதே போராட்டக் காலத்திலேயே - போராட்டக் களத்திலேயே தி.மு.க.வையும் மிகப்பெரும் ஆதரவு சக்தியாகக் கருதினார். தி.மு.க.வையும், அக்கட்சியின் ஆட்சியையும் பாதுகாப்பதிலும் கவனமாக இருந்தார். அந்த சமூக அக்கறை மிகுந்த அணுகு முறையை நமது இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தத் தொகுப்பு.

*தி.மு.க அரசும், மந்திரிகளும், அதிகாரிகளும், தம்மிடம் மிகுந்த கனிவும், மரியாதையும், நன்றியும், அன்பும் செலுத்துகிறார்கள் என ஒரேடியாகப் புகழ்ந்தார் பெரியார். 16.9.1967 விடுதலை தலையங்கம் பெரியாரின் மகிழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. காரணம்?*

*28.11.1967 இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா திராவிடருக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கிட்டாதிருந்த பெருவாய்ப்பை அளித்தது. அதாவது இதுவரை நடைபெற்றிருந்த சுயமரியாதை திருமணங்கள் அனைத்துமே செல்லுபடியாவதற்கு (With Retrospective Effect) இச்சட்டம் வழிவகுத்து, பார்ப்பனரின் மதகுருத் தன்மை ஒழியவும், மூடச்சடங்குகள் அகலவும் வழிவகுத்து, உரிமையளித்த இச்சட்டத்தை நிறைவேற்றியதன் மூலமாகப், பெரியாரின் நீண்ட நாளையக் கனவை நனவாக்கினார் முதல்வர் அண்ணா.*

*நாம் இருக்கின்ற காலத்துக்குள், நமக்குப்பின் வேறு யார் வந்து ஆண்டாலும் மாற்ற முடியாதபடி, சில நிலையான காரியங்களை, அவை மூன்று நான்காயிருந்தாலும் கூடப்போதும்; செய்து முடிக்க*

வேண்டும் என்று சொல்லிய வண்ணமே அண்ணா தமிழ்நாடு பெயர் மாற்றம், சுயமரியாதைத் திருமண சட்டம், பி.யூ.சி வரை இலவச கல்வி ஆகியத் திட்டங்களைக் கொண்டு வந்தார். அந்தச் சாதனைகளைப் பாராட்டும் வண்ணமாகப் பெரியார் பாராட்டுத் தலையங்கத்தை எழுதியிருந்தார். இதுபோல, 1973 வரை தோழர் பெரியார் எழுதியவற்றில் ஒருசிலவற்றைப் பார்ப்போம்.

*40 வருடகாலம் இம்முறையில் பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் நடை பெற்றும் இது (சீர்த்திருத்தத் திருமணம்) சட்டப்படி செல்லுபடி அற்ற திருமணமாக இருந்தது. அதனை அண்ணா அவர்கள் ஆட்சி, சட்டப்படி செல்லக் கூடிய தாக்கிவிட்டது. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்காகவே முதலில் அண்ணாவிற்கு வணக்கம் தெரிவித்து ஆரம்பிக்க வேண்டும்.

- விடுதலை, 06.08.1968

*அண்ணாத்துரை பின் சரித்திரத்தில் "சமுதாயச் சீர்த்திருத்த வீரர்" எனப் பொறிக்கப் படுவார் என்பது உறுதி.

- விடுதலை, 20.08.1968

*அண்ணா அவர்கள் நம் நாட்டுக்கு நிதி என்று தான் சொல்லவேண்டும். ஆட்சிப் பொறுப் பேற்றதும் பகுத்தறிவுக் கொள்கைப்படித் துணிந்து ஆட்சி செய்து வருகிறார். ஒவ்வொரு மன்றங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் அண்ணா அவர்கள் படம் இருக்கவேண்டும். ஏனெனில், வரலாறு தோன்றிய காலம் முதல் இம்மாதிரிப் பகுத்தறிவாளர் ஆட்சி ஏற்பட்டதே கிடையாது.

-விடுதலை, 10.09.1968

*அண்ணாவை "அறிஞர் அண்ணா" என்று சொல்லக் காரணம் அவருடைய அறிவின் திறம் தான்.

- விடுதலை, 15.09.1968

*இந்த நாட்டில் தமிழர் சமுதாயத்தினருடைய அன்பை இதுவரை வேறு எவரும் பெறாத அளவுக்குப் பெற்றுவிட்டார். எங்கு சென்றாலும் எப்பக்கம் திரும்பினாலும் அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க!! அண்ணா வாழ்க!!! என்ற முழக்க ஒலிதான்.

- விடுதலை, 15.09.1968

*அவருக்குத் (அண்ணாவுக்கு) தெரியாதது ஒன்றுமில்லை. எல்லா விசயங்களையும் அறிந்தவர். இராமாயணத்தைக் கொளுத்த இருக்கிறார். கடவுள் படங்களை எல்லாம் பிய்த்து எடுத்திருக்கிறார். மாபெரும் புலவர்களையெல்லாம் திணற வைத்திருக்கிறார். குடிஅரசு, விடுதலை பத்திரிக்கையில் பத்திரிக்காதிபராக இருந்து பல பகுத்தறிவு கருத்துகளைப் பரப்பி இருக்கிறார். பல புத்தகங்கள் கடவுள், புராணங்களை பற்றி எழுதி இருக்கிறார்.

- விடுதலை, 20.09.1968

*அண்ணா அவர்கள் சமுதாயத் துறையில் பெரிய மாற்றம் ஏற்படுத்த அவர் கைக் கொண்டிருக்கும் ஆயுதம் பகுத்தறிவாகும். அதாவது எந்தக் காரியமானாலும் அறிவு என்ன சொல்கின்றது என்று பார்த்து சிந்தித்து செயல்படுத்துவதாகும்.

- விடுதலை, 30.10.1968

*அண்ணா அவர்கள் நமக்குக் கிடைத்தற் கரியது கிடைத்தது போன்றவராவார்கள்; அவர் போனால் அடுத்து அந்த இடத்திற்குச் சரியான ஆள் இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு பெருமை உடையவர்கள். நமது நல்வாய்ப்பாக அவரது தலைமையில் பகுத்தறிவாளர் ஆட்சி அமைந்துள்ளது. இதனைக் காப்பாற்ற வேண்டியது. தமிழர் கடமையாகும்.

- விடுதலை, 06.11.1968

*அண்ணாவின் குணம் மிகமிகத் தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாய் இருந்தாலும் முடியாது என்று சொல்ல மிகவும் தயங்குவார். நல்ல ஆராய்ச்சி நிபுணர்.

- விடுதலை, 03.02.1969

*அண்ணா அவர்களின் கொள்கை சந்தேகத்திற்கு இடமில்லாதவையேயாகும். அவர் நம்மிடம் இருந்தபோது மட்டுமல்ல, வெளியே சென்ற பின்னும் ஆரிய மாயை, கம்பரசம், கடவுள், பகுத்தறிவுக் கருத்துக்கள் என்பதாகப் பல புத்தகங்கள் எழுதி இருக்கிறார்கள். அண்ணா அவர்களைப் போல அவரது தம்பிகளையும் கொள்கையில் உருவாக்கி இருக்கிறார்கள்.

- விடுதலை, 12.02.1969

*அண்ணா அவர்கள் ஒரு பகுத்தறிவுவாதி, கடவுள், மதம், சாத்திரம், சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லாதவர் அவர் பதவிக்கு வந்தபோதும் கடவுளை நம்பாதவர். அதனைக் காரியத்தில் காட்டினார். எனக்கு சொல்லவே வெட்கமாக இருக்கின்றது; இருந்தாலும் சொல்லுகின்றேன். இந்த மந்திரி சபையே எனக்கு காணிக்கையாக வைத்திருப்பதாக அவர் சொன்னார்.

- விடுதலை, 13.02.1969

*அரசாங்க அலுவலங்களில் இருந்த கடவுள் படங்களை அகற்ற அண்ணா உத்தரவு போட்டார். இதன் மூலம் மூடநம்பிக்கை இல்லை என்பதைக் காட்டிக்கொண்டார். சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கியது முக்கியமல்ல; அதிலே கடவுள், மதம் புகக்கூடாது என்பதற்கு வழிசெய்ததுதான் முக்கியமாகும். அவர் சிறந்த பகுத்தறிவுவாதி. அவ்வளவு பெரிய மேதைக்கு அவர் மறைந்த அன்று 30 இலட்சம் பேர் பின் தொடர்ந்தார் களென்றால் இந்த நாட்டு மக்களை அவர் அவ்வளவு தூரத்திற்குப் பண்படுத்திவிட்டார் என்று அர்த்தம்.

- விடுதலை, 13.02.1969

*அண்ணா மீது உண்மையான அன்பு காட்டு கிறவர்கள் அவரைப் பின்பற்றிப் பகுத்தறிவுப் பாதையில் நடக்க வேண்டும்.

- விடுதலை, 13.02.1969

*எந்தக் காரியத்தையும் கடவுள், மதம், சாத்திரம் ஒப்புக்கொள்கிறது என்பதற்காக ஒப்புக்கொள்ள மாட்டேன். எனது அறிவைக் கொண்டு சிந்தித்து எனது அறிவிற்கு ஏற்புடையதாக இருந்தால் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னவர் புத்தராவார் என்பதோடு மற்றவர்களும் அதன்படி நடக்கவேண்டு மென்றும் சொன்னவராவார். அண்ணா அவர்களும் கடவுள், மதம், சாத்திரம், பழமை முன்னோர்கள் சொன்னது என்பதற்காக எதையும் கடைபிடிக்காதே, பின்பற்றாதே உன் அறிவைக் கொண்டு சிந்தித்துப்பார். உன் அறிவிற்கு அது சரியென்று தோன்றினால் அதை ஏற்று அதன்படி நட, உன் அறிவிற்குச் சரியில்லையென்று தோன்றினால் தள்ளிவிடு என்று கூறியவராவார்; என்பதோடு எதையும் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து ஏற்கும் தன்மையுடையவர்.

- விடுதலை, 20.02.1969

*இன்றைய தினம் நம்முடைய வாழ்வு கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அண்ணா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வேண்டு மென்று சொன்னார். நான் சொல்கிறேன் கடமை, கண்ணியத்தை பற்றி கவலையில்லை. கட்டுப் பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். அதுதான் அண்ணா இல்லாத நேரத்தில் மிக மிக முக்கிய அவசியமாகும்.

- விடுதலை, 20.02.1969

*அண்ணா அவர்கள் என்னிடம் வந்தபோது படித்த அ,ஆ வன்னாவெல்லாம், மனித சமுதாயத் திலிருந்து இழிவு, மானமற்ற தன்மை ஆகியவை களுக்குக் காரணம் கடவுள், மதம், சாத்திரம், புராணம், இதிகாசம், தர்மம் இவைகள்தான். இவைகள் ஒழிக்கப்பட்டால்தான் மனிதச் சமுதாயத்தின் இழிவும், மானமற்ற தன்மையும் போகும் என்பதேயாகும்.

- விடுதலை, 01.03.1969

*நம்நாட்டில் பலர் அரசியலுக்காக, சுதந்திரத் திற்காக, பக்திக்காக, மோட்சத்திற்காகப் பாடு பட்டிருப்பார்கள். ஆனால், அண்ணா அவர்கள் இதற்காகப் பாடுபடவில்லை என்பதோடு இவைகளுக்கு முற்றும் மாறான சமுதாயச் சீர்த்திருத்தத்திற்காக, சமுதாய முன்னேற்றத்திற்காக, மக்களின் நல்வாழ்விற்காக நம் மக்களுக்கு ருசியளிக்காததும், அதனால் எந்தப் பணி பாராட்டும் கிடைக்காததுமான சமுதாயச் சீர்த்திருத்த பணியினை மேற்க்கொண்டிருந்தார்.

- விடுதலை, 20.03.1969

*சமுதாயச் சீர்த்திருத்தப் பணி மற்ற பணிகளைப்போல் சாதாரணப் பணியல்ல. மக்களின் வெறுப்பிற்கும், ஏச்சுப்பேச்சுக்கும் ஆளாகி அவர்கள் நீண்ட காலமாகக் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும், நடப்பிற்கும் விரோதமாகச் செய்யும் பணியாகும். சமுதாயச் சீர்த்திருத்தப் பணிக்கு என்ன செய்யவேண்டுமோ அதையே சிறப்புப் பெயராகக் கொண்டவர் அண்ணா ஆவார். 'அறிஞர்' என்கின்ற பெயர் வேறு எவருக்கும் கிடைத்தத்கரிய பெயராகும். அப்படிப்பட்ட பெயரை முதலில் அண்ணா பெற்றார். நம் நாட்டில் இதுபோல் பெயர் பெற்றிருந்தவர் புத்தர் ஒருவர்தான் ஆவார். புத்தியைக் கொண்டு சிந்தித்ததாலேயே அவர் புத்தரானார். அறிஞர் என்ற பெயர் பெற்றவர்களால் தான் சமுதாயச் சீர்திருத்தம் செய்ய முடியும்.

- விடுதலை, 20.03.1969

*அண்ணா ஒருவர் தான் எந்தப் புரட்சியும், கொலையும் இல்லாமல் பகுத்தறிவு ஆட்சியை நிறுவியவராவார். லெனின் பகுத்தறிவு ஆட்சியை உண்டாக்கினார் என்றால் பாதிரிகள், பணக்காரர்கள், மதவாதிகளைக் கொன்று உண்டாக்கினார். ஆனால், அண்ணா ஒருவர்தான் ஒரு சொட்டு ரத்தம் சிந்தாமல் பார்ப்பனரைப் பணக்காரனைக் கொல்லாமல் பகுத்தறிவு ஆட்சியை அதுவும் மக்களின் ஆதரவைப் பெற்று நிறுவிய வராவார்கள்.

- விடுதலை, 23.12.1969

*அண்ணா ஒரு களஞ்சியம். ஆங்கிலத்தில்தான் சொல்வார்கள் "என்சைக்லோபீடியா" என்று அது எல்லாக் கலைகளும் விசயங்களும் நிறைந்த புத்தகமாகும். அது போன்றே எல்லாக் கலைகளையும், விசயங்களையும் உணர்ந்தவர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

- விடுதலை, 11.03.1970

*அறிஞர் அண்ணாவின் புகழ் மேலும் மேலும் ஓங்க வேண்டுமானால் அவரது பகுத்தறிவுக் கொள்கையும் சுயமரியாதை மேம்பாட்டையும் மனதில் நிறுத்திச் செயல்படுவதுதான் அதற்கு வழிவகுக்கும்.

- விடுதலை, 11.03.1970

*அண்ணா அவர்களின் பெருமையைப் பற்றி வெகு பேருக்குத் தெரியாது. ஒரு கட்சித் தலைவர்; அரசியலுக்காகப் பாடுபட்டவர் என்பதுதான் தெரியும். அண்ணா அவர்கள் தனியாக ஒரு கொள்கையைக் கொண்டு அக்கொள்கையை மக்களிடையே பரப்பி மக்களைப் பக்குவப்படச் செய்து அதன் மூலம் ஆட்சியை அமைத்தவராவார். இவரைப் போல் ஒருவரை சொல்ல வேண்டுமானால் லெனினைத் தான் சொல்லாம். அவர்தான் அண்ணா போன்று தனியாக கொள்கையை ஏற்படுத்தி அதன் மூலம் ஆட்சியை அமைத்து காலமானவர் ஆவார்.

- விடுதலை, 01.07.1970

*இந்தியாவிலேயே அண்ணா சாதித்ததைப் போல் எவருமே சாதிக்கவில்லை.

- விடுதலை, 03.02.1973

**தோழர் அண்ணாவின் மறைவில் தோழர் பெரியார்**

துயரம் மிகுந்த தோழர் அண்ணாவின் மறைவுச் செய்தி 02.02.1969 அன்று வெளியிட்ட

சுருக்கமான செய்தி, "நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. எதிர்காலம் இருட்டாகவே இருக்கிறது. நாலு கோடி மக்களையும் பொறுத்த, பெரிய, பரிகாரம் செய்ய முடியாத துக்கச் சம்பவம் ஆகும்." என்று உடனடிச் செய்தியாகப் பெரியாரால் இவ்வளவு தான் சொல்ல முடிந்தது!.

03.02.1969 விடுதலையில், "அண்ணாவின் முடிவு" என்ற பெரியாரின் தலையங்கம் வெளியாயிற்று.

"இன்று அண்ணா அவர்கள் முடிவு எய்தி விட்டார். இந்த முடிவு தமிழ்நாட்டின் நான்கு கோடி மக்களை மாத்திரமல்லாமல், இந்தியா விலுள்ள மக்களை மாத்திரமல்லாமல், உலகில் பல பாகத்திலுள்ள மக்களையும் பெரும் துக்கத்தில் மூழ்கடித்திருக்கும் முடிவாகும்.

அண்ணாவுக்குச் செய்த வைத்தியச் சிகிச்சை உலகில் வேறெங்கும் செய்திருக்கமுடியாது. டாக்டர் சதாசிவம் தலைமையில் அமைந்த குழுவினரும் வேலூர் டாக்டர்கள் டாக்டர் ஜான்சனும், டாக்டர் பதம்சிங்கும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தியும் அரும்பாடு பட்டிருக்கிறார்கள்.

அண்ணாவின் மறைவு தமிழ்நாட்டிற்கு மாபெரும் நஷ்டம் என்றே சொல்லவேண்டும். தமிழ்நாடும், தமிழர் சமுதாயமும் அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசயமான முன்னேற்றம் அடைய காத்திருந்தது. நான் இந்த மந்திரி சபையையே பெரியாருக்குக் காணிக்கையாக வைத்து விட்டேன். என்று அண்ணா சொன்னதை பெரியாரின் கொள்கைப்படி நான் நடப்பேன் என்று சொன்னதாக நான் கருதினேன்.

நான், தி.மு.க. தேர்தலில் வெற்றி பெறும்வரை, அக்கழகத்திற்கு படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை மறந்து, அடியோடு மறந்து, மிக்க பெருந் தன்மையுடன், நட்புக்கொள்ள ஆசைப்பட்டு என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன், நண்பராகவே நடத்தினார்.

இப்படிப்பட்ட ஒரு அற்புதகுணம் படைத்த அண்ணா முடிவானது, தமிழருக்கும் தமிழ்நாட்டிற்கும் பரிகாரம் செய்ய முடியாத நட்டமேயாகும். மனிதன் தன் வாழ்நாளில் அடைந்த வெற்றிக்கு, மேன்மைக்கு அறிகுறி, முடிவின்போது அடையும் புகழ்தான் என்பது எனது கருத்து. அதுபோலவே அண்ணாவின் புகழ் மிகமிகப் பாராட்டுக்குரியதாகும். இப்படி எல்லாரும் துக்கம் கொண்டாடும்படியான அரிய வாய்ப்பு எல்லாருக்கும் கிடைக்காத வாய்ப்பாகும். இனியும் அவர் புகழ் ஒங்கவேண்டுமானால், அண்ணாவுக்குப் பிறகும் அண்ணா இருப்பது போலவே காரியங்கள் நடைபெறவேண்டும். தி.மு.க. தோழர்களையும் நான் எனது தி.க தோழர்களை போலவே கூட்டுப் பணியாளர்களாகவே கருதுகிறேன். பொது மக்கள் எல்லாருமே ஒத்துழைத்து, மக்களுக்கு வேண்டிய நலன்களைப் பெற பாடுபட வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்."

## வானொலி உரை

03.02.1969 வானொலியில் பெரியார் இரங்கலுரை ஆற்றினார்.

"அண்ணா முடிவெய்திவிட்டார் அண்ணா வாழ்க! அதாவது அண்ணா கொள்கை வாழ்க! நோய் வருவதும், முடி வெய்துவதும் மனித ஜீவனுக்கு இயற்கையே ஆகும். அதற்காக மக்கள் வருந்துவதும், துக்கம் கொண்டாடுவதும் மக்களுக்கு ஒரு சம்பிரதாயமே ஆகும் என்றாலும் இவ்விஷியத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் சம்பிரதாயத்தையெல்லாம் தாண்டி, மக்களின் உச்சநிலை துக்கக் கொண்டாட்டத்தையே பெற்று விட்டார்!"

இன்று மக்களுக்கு உள்ள கவலையெல்லாம் நானறிந்த வரை, அண்ணா முடிவடைந்து விட்டதே இனி ஆட்சி எப்படி இருக்குமோ? என்பதுதான்! நான் சொல்வேன். 'அண்ணா இறந்துவிட்டார்; அண்ணா வாழ்க! என்பதற் கிணங்க, இனி நடைபெறும் ஆட்சியில் எவ்வித மாறுதலும், திருப்பமும் இல்லாமல், இவரது கொள்கை வளர்ந்து ஆட்சியாளர்கள் தாங்கள் தமிழர்கள், தமிழர்களுக்காகத் தமிழர்களாக ஆட்சி செய்கிறோம் என்கின்ற உணர்ச்சியோடு, மற்ற இனத்தார் காட்டும் இன உணர்ச்சியை தங்களுக்கு வழிகாட்டிய வைத்துக்கொண்டு அதன்படி நடந்து கொள்வார்கள் என்றே கருதுகின்றேன். இயற்கையும் அவர்களை அந்தப்படியே நடக்கச்செய்யும் என்பது உறுதி. அதற்காக யாரும் கவலைப்படவேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்."

04.02.1969 இரவு 8 மணிக்கு இது ஒலிபரப்பாகியது. மக்கள் கூட்டம் 15 இலட்சம் பேர் என்று குறிப்பிட்டிருந்தார்.

"நாடு பஞ்சம், வறட்சி என்று தவித்துக் கொண்டிருக்கையில், பார்ப்பான் பாரத ராமாயணம் படிப்பதை நிறுத்துகிறானா? ஆட்சி மீது குறை சொல்வதை நிறுத்துகிறானா? என் உயிர் உள்ளவரை தி.மு.க ஆட்சியை ஒழியவிடமாட்டேன்!" என்று உறுதி தெரிவித்த பெரியார், நீதித்துறையில் யாரும் தொட்டுக் காட்டாத ஓர் அக்கிரமத்தை குறிப்பிட்டிருந்தார்.

* "ஜில்லா ஜட்ஜுகள் 16 பேர்தான் இருக்கிறார்கள். அவர்கள் தீர்ப்பு மீது அப்பீலை விசாரிக்க, அய்கோர்ட்டில் ஏன் 18 நீதிபதிகள்?"

என்ற கேள்விக்கு, என்ன பதில்? ஜட்ஜுகளை வக்கீலில் இருந்து நேரடியாக நியமிப்பதை பெரியார் இடைவிடாமல் எதிர்த்து வந்தார்.

17.09.1969 தோழர் பெரியாரின் 91 வது பிறந்தநாள் விழா தஞ்சையில் நடைபெற்ற கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி பேசும்போது,

"பெரியார்தான் தமிழக அரசு. தமிழக அரசுதான் பெரியார். நாங்கள் பகுத்தறிவாளர்கள் என்பதற்கு ஒரே சான்று, அதிர்ஷ்டமில்லாததென்று சொல்லப்படும் 13 தான் இன்றைய அமைச்சர்களின் எண்ணிக்கையாகும். நாங்கள் ஆதரவு பெற்றவர்கள் அல்ல. பெரியாராலேயே ஆளாக்கப்பட்டவர்கள்"

என்று உணர்ச்சி பொங்க உரைத்தார். இன்று எனக்குள்ள குறையெல்லாம், தமிழர் சமுதாயத்தில் விபீஷணப் பரம்பரை வளர்ந்து வருவதுதான். இது தமிழரில் சில 'சாதிக்கு' (வகுப்புக்கு) இயற்கை என்றாலும் இது வருந்தத்தக்கதேயாகும். எனது 90 ஆவது வயதை விட, 91 ஆவது வயது திருப்தியையும், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது என்பது என் கருத்து.

* "தி.மு.க ஆட்சி, இனியும் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது இருக்கும்படி, மக்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். எனக்கு இதற்கு மேல் கருத்தும் ஓடவில்லை; எழுதவும் முடியவில்லை."

- விடுதலை, 31.07.1969

தோழர் பெரியாரின் நீண்டகால சமூகநீதியின் உச்சபட்ச கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சர் கலைஞரின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனை.

தமிழகத்தின் சென்னை உயர்நீதிமன்றம் 1861 ல் துவங்கி 1973 வரை நிகழாத ஒரு வரலாற்று நிகழ்வு தோழர் பெரியாரின் வேண்டுகோளை ஏற்று 112 ஆண்டுகளுக்கு பிறகு 14.02.1973 அன்று முதன்முறையாக உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த நீதிபதி ஏ.வரதராஜன் நியமனம் செய்யப்பட்டார்.

## கலைஞர் குறித்தும் தி.மு.க குறித்தும் பெரியார்

திராவிடர் இயக்க அரசியல் பிரிவான தி.மு.க குறித்து கலகக்காரர் தோழர் பெரியாரின் 1967 தொடங்கி 1974 முடிய பெரியாரின் மதிப்பீடுகள்:

*கருணாநிதி அவர்கள் இராசதந்திரம் மிக்கவர். இந்த நாடு சிக்கல் நிறைந்த நாடு. ஒழுக்கம், நாணயம், நேர்மை ஆகியவற்றை பற்றிக் கவலைப்படாத மக்களுள்ள நாடு. இந்த நாட்டில் மிகச் சிக்கலான பிரச்சனைகளை எல்லாம் மிக்க அறிவுத் திறன் காரணமாக தீர்த்து வருகிறார்.

- விடுதலை, 10.02.1971

*யார் ஆள்கிறார்கள் என்பதைவிட எப்படி ஆள்கிறார்கள் என்பதுதான் எனக்கு முக்கியம். சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, வகுப்புவாரி உரிமை ஆகிய எனது கொள்கைக்கு ஆதரவாகப் பகுத்தறிவு வாதிகளே (தி.மு.க) ஆட்சிக்கு வந்து, பதவிப் பிரமாணம் கூட இவர்கள் கடவுள் பேரால் செய்யாதது திருப்தி அளிக்கிறது.

- விடுதலை, 15.09.1967

* ஜஸ்டிசு கட்சி கவிழ்ந்ததற்குக் காரணம் இன்றைய காங்கிரசார் போலவே தமிழர்கள், பார்ப்பன தாசர்கள் செய்த துரோகம் அல்லாமல் வேறு காரணம் ஒன்றுமில்லையே! இன்னும் சொல்கிறேன் கடுகளவு தமிழர் உணர்ச்சி பற்றுள்ள யாரும் இன்றைய (தி.மு.க) ஆட்சியை கவிழ்க்க நினைக்கவே மாட்டார்கள்.

- விடுதலை, 18.09.1967

*தாங்கள் பகுத்தறிவுவாதிகள்; கடவுள் நம்பிக்கை அற்றவர்கள்; தமிழர்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் என்பதைத் தங்களின் செயல் மூலம் காட்டிக் கொண்டார்கள். எல்லா மந்திரி களையும் தமிழர்களாக பார்த்துப் போட்டார்கள். உத்தியோகங்களைத் தமிழர்களுக்குக் கொடுத் தார்கள்.

*தண்ணீரில் தன் மகன் விழுந்து தத்தளிக்கும் போது, தன் மானத்தைப் பற்றிக் கவலையில்லாமல் தன் சீலையை அவிழ்த்து ஒரு முனையை வீசித் தண்ணீருக்குள் எறிந்து, தத்தளிக்கும் மகனை அந்த முனையை பிடித்து கொள்ளச் செய்து கரைக்கு இழுத்துக் காப்பாற்றும் தாயைப்போல் நாம் (தி.மு.க வை) காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்.

- விடுதலை, 05.03.1968

*தி.மு.கழகமென்றால் பகுத்தறிவு இயக்கம் என்று பெயர். அதில் உள்ளவர்கள் யாவரும் பகுத்தறிவாதிகளாவார்கள். யாரோ சில பேர் பட்டை நாமம் போட்டுக் கொள்கிறவர்கள், கோயிலுக்குப் போகிறவர்கள் இருக்கலாம். அவர்கள் எல்லாம் பதவிக்காக சுயநலம் காரணமாகத் தி.மு.கழகத்திலிருப்பவர்களே தவிர கொள்கைக்காக இருப்பவர்கள் அல்ல.

- விடுதலை, 05.01.1971

*திராவிட முன்னேற்றக் கழகம் என்பது சற்றேறக்குறைய இரண்டு, மூன்று ஆயிரம் ஆண்டு களாக ஆரியர்களால் தாழ்த்தப்பட்டு, அடக்கப் பட்டுத் தலைநிமிராமல் அழுத்தி வைக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கென்றே தோற்றுவிக்கப்பட்ட கழகமாகும்.

- விடுதலை, 11.03.1971

*பொதுவாக சொல்லவேண்டுமானால் இந்தியாவிலே பார்ப்பனர் தவிர்த்த மற்றத் திராவிடர் சமுதாயத்திற்குச் சிறப்பாகச் சமூகத்துறையில் அரசியல் மூலம் தொண்டாற்றும் ஸ்தாபனம் திராவிட முன்னேற்ற கழகம் ஒன்றே ஒன்றுதான் என்று சொல்லும் படியான நிலையில் இருந்து வருகிறது.

- விடுதலை, 11.03.1971

*தி.மு.கழக ஆட்சியின் மூலந்தான் தமிழன் தான் அடைய வேண்டிய பலனை அடைய முடியும். ஆகவே இந்த ஆட்சிக்கு ஆதரவாக இருந்து பாதுகாக்க வேண்டியது தமிழர் கடமையாகும்!.

- விடுதலை 19.02.1973.


**உதவிய நூல்கள்:**

பெரியார் கணினி (தொகுதி -1, 2), பெரியார் 95, தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு,

அதி அசுரன்

# நூல் விமர்சனம்




நாம் பல காரணங்களுக்காக, பல நூல்களைப் படித்திருப்போம். பெரியார் எழுதிய, பேசிய தொகுப்புகளையும் படித்திருப்போம். பெரியாரின் எழுத்துக்களைப் படிக்கும்போது, நாம் படிப்பது போன்ற உணர்வு மெல்ல மெல்ல மறைந்து அவர் சொல்லிக்கொண்டிருக்கும் களத்திலேயே நாம் நிற்பதைப் போல உணர்வோம். அந்த அளவுக்கு, சமூகத்தின் அன்றாட நடைமுறை வாழ்க்கையிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கூறிக்கொண்டே போவார். மிகப் பெரிய தத்துவ விளக்கங்களைக்கூட நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களின் வாயிலாக - நம் வாழ்க்கையிலேயே நாம் சந்தித்திருக்கும் நிகழ்வுகளின் வாயிலாக எளிமையாகப் புரியவைத்து விடுவார். அப்படி, ஒரு மனநிலையைத் தோழர் ஜெயராணி அவர்களின் "உங்கள் குழந்தை யாருடையது?" என்ற நூல் ஏற்படுத்தியது.

நூலில் உள்ள உணவு, மருத்துவம் தொடர்பாக உள்ள கட்டுரைகளில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவன் நான். ஒருவேளை எதிர்காலத்தில் எனக்கு உரிய விளக்கங்கள் கிடைத்தால் அவற்றையும் ஏற்கலாம். அவை தொடர்பான கட்டுரைகளில் கூட உணவு, மருத்துவம் போன்ற துறைகளில் உள்ள சிக்கல்கள், அவற்றால் மக்கள் அடையும் துன்பங்கள் பற்றிய தகவல்களில் எனக்கு எந்த மாறுபாடும் இல்லை. அவற்றுக்கான தீர்வுகளில் எனக்கு இன்னும் முழுமையான உடன்பாடு வரவில்லை. உடன்பாடு உள்ளவைகளைப் பார்ப்போம்.

குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமா? வேண்டாமா? என்பதை நாம் முடிவு செய்வதில்லை. சமுதாயம் நம்மை அந்தத் திசை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது. சமுதாயத்தின் பொதுப்புத்தி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவை, நம்மைப் பிள்ளை பெற்றுக்கொள்ள வற்புறுத்தாவிட்டால், இயல்பாக, நாமே விரும்பிக் குழந்தை பெற்றுக் கொள்வோம் என்று உறுதிசொல்ல முடியாது.

குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே நம்முடையதாக இல்லாத சமுதாயத்தில், நமக்குப் பிறக்கும் குழந்தைகள் நம்முடையதாக இருக்க வாய்ப்பே இல்லை. அப்படிப் பிறக்கும் குழந்தைகளும் அவர்களது தன் இயல்பாக வளர்வதற்கும் வாய்ப்பு இல்லை. இதை மிக எளிமையாக, விளக்கமாக, அறிவுப்பூர்வமாகப் பேசுகிறது இந்நூல்.

நூலுக்கு எழுதப்பட்டுள்ள அணிந்துரையில் தோழர் உமர் ஃபாரூக் அவர்கள், கிராமங்களில் நாம் கேள்விப்பட்ட, "பிடி குஞ்சுகள்" என்ற சொல்லை மிக நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு நினைவு படுத்தியுள்ளார். அந்த ஒற்றைச் சொல்லிலேயே நூலின் பல பக்கங்களைப் புதைத்து வைத்துள்ளார்.

தோழர் ஜெயராணியின் முன்னுரையிலும் அதே போன்ற ஒரு வாக்கியம் வருகிறது. " குழந்தை வளர்ப்பில் நாம் செய்யும் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் தான் ஒரு சமூகத்தின் பண்பாட்டு மாற்றத்திற்கு நல்ல வகையில் பங்களிக்கின்றன" இது தான் இந்த ஒட்டுமொத்த நூலின் நோக்கமாக இருக்கிறது.

முதல் கட்டுரையிலேயே "குழந்தைகள் மீது நமக்குப் பொறுப்பு உண்டு. அதிகாரம் கிடையாது" என்று அழுத்தமாகத் தொடங்குகிறார். 2 ஆம் கட்டுரையில் உணவுப் பொருட்களை வீணடிப்பது, தேவையின்றி வாங்கிக் குவிப்பது, அலுமினியக் கவர்களில் அடைக்கப்பட்ட பன்னாட்டு நிறுவனங் களின் சிறுதீனிகளைத் தேடி ஓடுவது போன்றவை பேசப்படுகிறது. இவை மறுக்க முடியாத சீரழிவுகள்தான்.

சாப்பாடோ, சிற்றுண்டியோ, தீனிகளோ, உணவுப் பண்டங்கள் எதுவாக இருந்தாலும், அவை தயாரிக்கப்படும் இடத்திற்கும் பயன்படுத்தப்படும் இடத்திற்கும் எந்த அளவுக்கு தூரமும், நேரமும் குறைவாக இருக்கிறதோ - அந்த அளவுக்கு ஆரோக்கியமானது. ஒரு உணவுப்பொருளைப் பயன்படுத்து வதற்கான காலம் (Best Before Date) முடிவதற்கு இன்னும் 3 மாதமோ, 6 மாதமோ, 1 வருடமோ இருக்கிறதென்றால், அது உறுதியாக Sodium Benzoate Powder போடப்பட்டதுதான்.

இதன் அளவைக் கண்காணிப்பதற்காக சுகாதாரத்துறையில் அரசு அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களால், பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய தேசிய நிறுவனங்களின் பொருட்களை ஆய்வு செய்துவிட முடியாது. ஜி.எஸ்.டி வரம்பிற்குள் வரவே முடியாதவர்களின் நிறுவனங் களில் மட்டுமே இவர்களால் நுழையவே முடியும். எனவே, குழந்தைகளுக்கு Sodium Benzoate என்ற E211 - Preservative கலக்கப்பட்ட உணவுகளை அறிமுகப் படுத்தாமல் இருப்பதே நல்லது. குறைந்தபட்சம் பள்ளிக் காலங்களில் மட்டுமாவது தள்ளிவைக்க வேண்டும்.

குழந்தைகளுடன் சுற்றுலா என்பதே இந்தச் சமூகத்தில் இல்லை. கோவில்கள், அம்மா வீடு, மாமா வீடு என தன் ஜாதிச் சொந்தங்களின் வீடுகளுக்குச் செல்வது தான் இங்கு சுற்றுலா. வேறு எங்கும் செல்வதாக இருந்தாலும் அந்தச் சுற்றுலா இடத்தைப் பற்றிய எந்தத் தகவலையும் அறிந்து கொள்ளப் பழக்கப்படவில்லை. வெறும் செல்பிக்காகவே அந்தச் சுற்றுலாக்கள் பயன்படுகின்றன. சுற்றுலாவே இல்லாத சமுதாயத்தில் “பயணங்கள்” இருக்க வாய்ப்பில்லை. பயணங்கள் இல்லாத குழந்தைப் பருவம் எதைக் கற்க முடியும்?

குழந்தைகளுடன் மனம் விட்டுப் பேசுதல், அவர்களைப் பேசுவதைக் கேட்கப் பழகுதல், அவர்களுடன் உரையாடுதல், இயற்கையைப் புரிந்து கொள்ளப் பழக்கப்படுத்துதல் போன்றவை மிகவும் அவசியமானவை.

குழந்தைகளுடன்தான் வசிக்கிறோம். குாந்தை களுக்காகத்தான் வாழ்கிறோம். குழந்தைகளைப் புரிந்து கொண்டோமா? குழந்தைகளுக்கு நம் குடும்பத்தைத் தவிர, இந்த நாட்டில் வாழும் வேறு பிரிவு மக்களை அறிமுகப்படுத்தினோமா? நமது குழந்தைகளுக்கு நமது ஜாதி, மதத்தைத் தவிர வேறு ஜாதி, மதங்களில் நண்பர்கள் இருப்பதை நாம் அனுமதித்தோமா? வாய்ப்பாவது கொடுத்தோமா?

மனித இனத்தைத் தவிர, இந்த உலகம் இயங்குவதற்குப் பங்காற்றிவரும் எண்ணற்ற தாவரங்கள், விலங்குகள், பறவைகள், ஆறுகள், கடல், பருவநிலைகள், நில அமைப்புகள், எரிமலை, பூகம்பம், மழை, வெயில், பனி, சூரியன் போன்றவை குறித்த அடிப்படைப் புரிதல்களைக் கொடுத்தோமா? முதலில் நமக்காவது அவை பற்றிய அறிவு இருக்கிறதா?

மனிதர்களைப் பற்றித்தான் பேசுவது என்றாலும், மனித இனத்தின் முக்கியத் தேவையான உணவு, உடை, வாழ்விடம், குடிநீர், ஆரோக்கியம், வளர்ச்சி இவை பற்றிய புரிதல்களைக் கொடுத்தோமா? மிக முக்கியமாக பாலியல் பற்றிப் பேசியிருக்கிறோமா? உலகம் தோன்றிய விதம், உயிர்கள் தோன்றிய விதம் பற்றி நமக்கே தெரியாத போது குழந்தைகளுக்கு எப்படிப் புரிய வைப்போம்?

இவை மட்டுமல்ல; பசி என்றால் என்ன என்றே புரியாத குழந்தைகள், வறுமையில் வாடுவோரை எப்படிப் புரிந்து கொள்ளும்? சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களோடு சரிநிகராக வாழப் பழகாத குழந்தைகள் தீண்டாமை வன்கொடுமை களையோ, ஜாதியையோ எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? பூமியைப் பற்றியும், சக மனிதர்களைப் பற்றியும், சக உயிர்களைப் பற்றியும் அறியாத குழந்தையால் அந்தக் குழந்தைக்குத்தான் என்ன நன்மை? என்பது போன்ற பல கசப்பான உண்மை களாலும், கேள்விகளாலும் நமது தவறுகளைப் புரியவைத்துக் கொண்டே பயணிக்கிறது இந்நூல்.

குறிப்பாக, பாலியல் கல்வி, பாலின சமத்துவக் கல்வி என்பவற்றை ஒரு தற்காப்புக் கலையாகக் கற்க வேண்டும் என்ற பார்வை சிறப்பானது. “அடல்ட்ஸ் ஒன்லி” பக்கங்களில் விவரித்துள்ள காட்சிகள் நாம் தினந்தோறும் பார்ப்பவைதான். உண்மையாகவே “அடல்ட்ஸ் ஒன்லி” என்ற பட்டியலில் வரவேண்டியவை எவை என்பதை நாம் உணர முடிகிறது.

கிறித்துவ மதத்தில் திருமணத்திற்கு முன்பு பாலியல் பற்றிய அறிமுகக் கல்வி கொடுப்பார்கள் எனக் கேள்விப்பட்டுள்ளேன். அதுபோல, திருமணம் நிச்சயிக்கப் பட்ட மணமக்களிடம் பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்? நூலையும் இந்த நூலையும் படிக்கச் சொல்ல வேண்டும்.

முற்போக்குத் தோழர்கள், திராவிடர் இயக்கங்களைச் சேர்ந்தோர், தங்களது திருமணத்தை உறுதி செய்யும் போதே, திருமணத்திற்கு முன்பே இந்த இரண்டு நூல்களையும் படிக்க வேண்டும். பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் குழந்தை பெற்றுக் கொள்வது பொதுவாழ்க்கையைக் கெடுக்கும் அல்லது குழந்தைகளின் வாழ்க்கையைக் கெடுக்கும். குழந்தை அவசியம் தேவை என்றால், பாலியல் கல்வி, பாலின சமத்துவம், குழந்தை வளர்ப்பு இந்த மூன்றிலும் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் பெற்றுக் கொள்ள வேண்டும். திருமணம் செய்து கொள்வதற்கே இவற்றைக் கட்டாயமாக்கிவிட்டால், குழந்தை பெற்றுக்கொள்வதுகூடக் குறைந்துவிடும்.

தோழர் ஜெயராணி அவர்கள், இந்த நூலை ஒரு 15 நாள் தொடர் வகுப்புக்கான பாடத்திட்டம் போல மாற்றி, திராவிடர் இயக்கங்கள், தலித் இயக்கங்களின் தோழர்களுக்கும், பள்ளி, கல்லூரிகளிலும், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களிலும் பயிலரங்கு களாக நடத்த முன்வர வேண்டும்.

காட்டாறைப் பொறுத்தவரை, பாலியல் கல்வி, பாலின சமத்துவப் பரப்புரைகள் போல, குழந்தை வளர்ப்பு குறித்த பரப்புரைகளையும் தொடங்க வேண்டும் என்ற சிந்தனையை இந்நூல் விதைத் துள்ளது. தனிப்பட்ட முறையில், “நல்ல வேளை நாம் குழந்தை பெற்றுக்கொள்ளவில்லை” என்ற மகிழ்ச்சியை உருவாக்கியது. நமது தோழர்கள் அனைவரும் அவசியம் படியுங்கள்.

**நூல் கிடைக்குமிடம்: தமிழ்வெளி,**
**எண் 1, பாரதிதாசன் தெரு, சினிவாச நகர்,**
**மலையம்பாக்கம், சென்னை - 600 122,**
**செல்: + 91 90 9400 5600,**
**மின்னஞ்சல் tamizhveli.com@gmail.com**

# இந்துமதம் அழியாமல் பாலியல் கொடுமைகள் அழியாது



ஒரு பாலியல் மாஃபியா கூட்டத்தின் இலை, தழைகள் சிக்கியுள்ளன. இன்னும் கிளைகளைப் பற்றித்தெரியவில்லை. வேர்களைப் பற்றிப் பேச்சே இல்லை. பொள்ளாச்சியில் நடந்த பாலியல் கொடுமைகள் என்ற பிரச்சனையில் மட்டுமல்ல; நாட்டில் நடக்கும் எந்தப் பாலியல் வன்கொடுமை களிலும் உண்மைக் குற்றவாளிகளுக்கு எந்தத் தண்டனையும் கிடைத்ததே இல்லை. அந்த உண்மைக் குற்றவாளிகளுக்கு, தாங்கள்தான் இந்தக் குற்றங்களுக்குக் காரணம் என்ற சிந்தனையே வரவில்லை.

இதைக்கூடப் பொறுத்துக் கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், இந்த உண்மைக் குற்றவாளிகள், தாங்கள் உருவாக்கிய சில அம்பு களையே "குற்றவாளிகள்" என்று பொது வெளியில் அடையாளப் படுத்துவதும், அந்த அம்புகளைக் கைது செய்யுங்கள் என்றும், அவர்களுக்குத் தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் போராடிக் கொண்டும் இருப்பதைத்தான் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

பாலியல் வன்கொடுமை என்றால் ஆடை களைக் கிழித்து ஓட விட வேண்டும், அய்யோ... அம்மா...என அலற வேண்டும். கதற...கதற...என்று டைட்டில் போடும் வகையில் ஏதாவது ஒரு காட்சி கிடைக்க வேண்டும். ஒரு பெண்ணை, ஒருவன் அல்ல...பத்துப்பேராவது வன்புணர்வு செய்திருக்க வேண்டும். அந்த நேரத்திலேயே அவள் அகால மரணம் அடைய வேண்டும், வன்புணர்வை முடித்து விட்டு உயிரோடு அவளைப் புதைத்துவிட வேண்டும்....

இப்படியெல்லாம் நடந்தால்தான் நாம் பொங்கி எழுவோம். அப்போதுதான் நமக்குள் இருக்கும் மனிதநேயம் பீறிட்டு எழும். இவற்றுக் கெல்லாம் முன்னர் நடக்கக்கூடிய, ஆண்களின் ஆபாசப் பார்வைகள், சீண்டல்கள், உரசல்கள், முயற்சிகள், அவற்றுக்குக் காரணமான நமது ஆண் குழந்தை வளர்ப்பு, இந்துச் சமுதாயத்தின் ஆணாதிக்க வாய்ப்புகள், பொதுப்புத்திகள் போன்ற எதைப் பற்றியும் எப்போதும் நாம் சிந்திக்க மாட்டோம்.

இரத்தம் சொட்டச் சொட்ட பாலியல் வன்கொடுமைகள் நடந்தால், சம்பந்தப்பட்டவர் களைத் தூக்கிலிடு, அறுத்து எறி, சி.பி.ஐ விசாரணை நடத்து என்று இரண்டு நாள் பேசிவிட்டு, பெண்களை அடக்க ஒடுக்கமாய் வளர்த்தெடுக்கப் போய்விடுவோம். நம் வீட்டு ஆண்களை ஊர் மேய...ஆம் மாடுகள் தீனிகளைப் பார்ப்பது போலத்தான் நமது ஆண்கள், பெண் இனத்தைப் பார்க்கின்றனர். அப்படித்தான் நாம் வளர்த்து மேய விடுகிறோம்.

இந்த வழக்கில் இதுவரை சிக்கியுள்ள குற்றவாளிகள் அனைவரும் ஒரே ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் தானா? பா.ஜ.க. போன்ற மதவாதக் கட்சிகள் எவற்றுக்கும் இதில் எந்தத் தொடர்பும் இல்லையா? அரசியலில் பங்கேற்காத ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுக்கு இதில் தொடர்பு இல்லையா? பொள்ளாச்சியில் உள்ள காவல்துறை, அதில் பல பிரிவுகளாக உள்ள உளவுத் துறைகள், அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள், நீதித்துறை, பெருவணிகர்கள் என எவருக்குமே இதுபற்றித் தெரியவில்லை என்பது உண்மையாக இருக்குமா? என்பவை போன்ற கேள்விகள் எழவேயில்லை.

அ.இ.அ.தி.மு.க வை 'இம்ப்பொடெண்ட்' (Impotent) என ஆணாதிக்கத் திமிரோடு திட்டித் தீர்த்த பார்ப்பன குருமூர்த்தி அவர்கள், பொள்ளாச்சி பிரச்சனையில் தலையிடுவது ஏன்? அ.இ.அ.தி.மு.க.வைக் காப்பாற்றத் குருமூர்த்திகள் துடிப்பது ஏன்? குருமூர்த்தியின் தலையீட்டைக் கூட திராவிடர் கழகம்தான் பேசியது. தமிழ்நாட்டின் புலனாய்வு இதழ்கள், இணையதள ஏடுகள் எதுவுமே இந்தக் காவித் தொடர்புகள் பற்றி எழுதாதது ஏன்?

"பொள்ளாச்சி: மாணவிகளின் புதிய செக்ஸ் வீடியோ" இது மார்ச் 12. 2019 அன்று 'மாலை மலர்' என்ற நாளேட்டில் வந்த தலைப்புச் செய்தி. இந்த மாலை மலர் என்ற ஒரு ஏடுதான் இப்படி எழுதியது. மற்ற ஊடகங்கள் இதில் நேர்மையானவை என்று கூறமுடியாது. இந்தப் பிரச்சனையில் இந்த ஊடகம் தன்னை வெளிப்படுத்திக்கொண்டது. இதுவரை நடந்த பாலியல் வன்கொடுமைகள், சீண்டல்கள் குறித்த எல்லாச் செய்திகளையும் திருப்பிப் பார்த்தால் இதுபோல பல ஊடக நிறுவனங்களின் உண்மை முகம் தெரிய வரும். ஊடகங்களைக் குற்றவாளிகள் என்று கூற வரவில்லை. ஊடகங்களும் பொறுப்பில்லாமல் இருக்கின்றன என்றுதான் கூறுகிறோம்.

மாலைமலரின் தலைப்புக்காக பலரும் மாலைமலர் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு கண்டித்திருக்கிறார்கள். ஆனால் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான எண்ணிக்கை கொண்ட தமிழர்கள், அதே "பொள்ளாச்சி செக்ஸ் வீடியோ" என்ற பெயரில் இணையதளங்களில் மிகத் தீவிரமான தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளனர். இப்படிப் பட்ட சமுதாயத்திலிருந்து அப்படிப் பட்ட தலைப்புகள்தானே வரும்? மாலை மலரைக் கண்டிப் பதற்கு முன்பு, இந்த தேடுதல் வேட்டை நடத்திய பொதுச் சமூகத்தை என்ன செய்யப் போகிறோம்?

இந்த வழக்குக்குத் தொடர்புடைய கோவை மாவட்டக் காவல்கண்காணிப்பாளர் பாண்டிய ராஜன் அவர்கள் சமூகப் பொறுப்போ, சட்டப் பொறுப்போ எதுவும் இன்றி பாதிக்கப்பட்டவர் களின் பெயர்களை வெளியிட்டு, புதிய புதிய குற்றச்சாட்டுக்கள் வெளிவராமல் தடுத்தார்.

அரசாங்கமோ, சிக்கியவர்கள் மீது அவசர அவசரமாகக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது. சி.பி.ஐ. விசாரணைக்கும் உத்தரவிட்டது. இதை அரசாங்கமே தானாக முடிவெடுத்துச் செயல் பட்டதா? முகநூல் தொடங்கி அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள் வரை எழுந்த கோரிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டதா? என்று புரியவில்லை. இப்படி, இந்த நாட்டின் சராசரி மக்கள் தொடங்கி, அரசு வரை குற்றவாளிகள் என யார் யாரையோ அடையாளம் காட்டிக் கொண்டு, தங்களது குற்றங்களை மறைத்துக் கொண்டனர்.

ஆண் குழந்தைகளை ஆம்பளத்தானமாக வளர்க்கும் வீடுகள், பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளுக்கும், மணப்பெண் தகுதிக்குமாக வளர்க்கும் வீடுகள், பெண்களை அலங்காரப் பொம்மைகளாகவும், சுகமளிக்கும் கருவியாகவும் கருதும் ஆண்கள், பெண்கள் சுயமாக எந்த முடிவையும் எடுக்க அனுமதிக்காத ஆண்கள், ஆண்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்களே பெண்கள் என்ற எண்ணத்தோடு வாழும் ஆண்கள், குடும்பம் தொடர்பான எந்த முடிவுகளையும் பெண்களிடம் விவாதிக்காத ஆண்கள்,

ஆண் - பெண் இருபால் குழந்தைகளையும் அருகருகே அமரக்கூட விடாமல் இடை வெளியை அதிகப்படுத்திய பள்ளிகள், ஆண் - பெண் மாணவர்கள் பேசிக் கொள்ளக்கூட அனுமதிக்காத கல்லூரிகள், அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை ஒழுக்கம் என்று கருதி, அது போன்ற கல்லூரிகளைத் தேடிச் செல்லும் பெற்றோர், பாலியல் கல்வியை வழங்காத அரசுகள்,

ஆணாதிக்கப் பண்பாடுகளை விதைக்கும் கடவுளர் கதைகள், இந்துமதப் பண்டிகைகள், தமிழர் பண்பாட்டு அடையாளமான ஆபாச உடைகளான வேட்டி, சேலை, தமிழர்களின் ஆணாதிக்கக் காட்டு மிராண்டிப் பண்பாடான ஜல்லிக்கட்டு, இள வட்டக்கல், ரேக்ளா, அந்தக் காட்டுமிராண்டி ஆணாதிக்க விளையாட்டுகளுக்காகப் போராடும் மக்கள், அப்படிப்பட்ட மக்கள்கூட்டத்திலிருந்து ஆள்பிடிக்கச் சென்ற இயக்கங்கள்,

விரும்பினாலும் வெறுத்தாலும் திருமணம் எனும் அமைப்பைக் கட்டாயம் ஏற்றே ஆக வேண்டும்; ஒரு ஆணைச் சார்ந்தே வாழ வேண்டும் என்ற நிலைக்குப் பெண்ணை மிரட்டி வைத்துள்ள சமுதாயம், குடும்பம் எனும் ஆணாதிக்கப் பயிற்சி நிறுவனம், இந்த எல்லாவற்றையும் கட்டிக் காக்கும் இந்து மத வேதங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் என ஒட்டு மொத்த சமுதாயமும் பொள்ளாச்சிக் குற்றங்களுக்கு முதன்மையான குற்றவாளிகள்தான்.

சமுதாயத்தின் ஆணாதிக்கப் பொதுப் புத்தியையும் - ஆணாதிக்க மனநிலையையும், பெண் களிடம் உள்ள அடிமைத்தனங்களுக்கு ஆதரவான மனநிலையையும் அழிப்பதற்கான தொலை நோக்குத் திட்டங்களே இத்தகைய வன்கொடுமை களுக்குத் தீர்வாக இருக்கும். இதை ஒரு குறிப்பிட்ட சில தலைவர்களாலோ, தொண்டு நிறுவனங்க ளாலோ, புரட்சிகர இயக்கங்களாலோ, அரசாங்கத் தாலோ கூடத் தனித்துச் சாதிக்க முடியாது. அனைத்தும் ஒருங்கிணைந்த செயல் திட்டங்கள் தேவை.

பாலினச் சமத்துவத்திற்காக, ஒவ்வொரு முற்போக்கு அமைப்பும் தனியாக, பயிற்சி பெற்ற "பாலின சமத்துவ அணிகளை" உருவாக்க வேண்டும். அவர்களை வீடு, வீடாக அனுப்ப வேண்டும். பள்ளி - கல்லூரி விடுதிகளுக்கு அனுப்ப வேண்டும். அப்படிப்பட்ட திறன்வாய்ந்த தோழர்களாலும், திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைந்த, தொலை நோக்குத் திட்டங்களாலும் மட்டுமே பாலின சமத்துவம் மலரும். பாலியல் வன்கொடுமைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.




நூற்றாண்டு 1918-2019 100

அன்னை மணியம்மையார்

அன்னை
மணியம்மையார்
பிறந்தநாள் -
நூற்றாண்டில்
"உடைப்போம்
சமையலறைகளை!"

# Kitchen # DEMOLISH Vedic Tradition's

காட்டாறு
தொடர்புக்கு:
76676 79363
98940 69973
99427 38950



**பெண்களை இழிவு படுத்தும்**
**பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!**




**அன்னை மணியம்மையார் பிறந்தநாள் - நூற்றாண்டில் "உடைப்போம் சமையலறைகளை!"**

பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு,
கடவுளையே மாற்றிக்கொள்ளவேண்டிய
கட்டாயத்தை உருவாக்கும்
'குலதெய்வ வழிபாடு' களைத் தடைசெய்!








திருமணங்கள் உறுதி
செய்யப்படும் போதே,
அந்த மணமக்களுக்குத்
**'தனிக்குடித்தனம்'**
என்பதைக்
கட்டாயமாக்கு!

திருமணத்தின் பெயரால்
கணவன் என்ற
உரிமையால் நடக்கும்
(Marital Rape) பாலியல்
வன்முறைகளைக் கடும்
குற்றமாக்கு!



காட்டாறு
தொடர்புக்கு:
76676 79363
98940 69973
99427 38950


Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com